ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

05.10.2016 - மலர் 13, இதழ் 32










மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைத்து சரியான வாக்கியங்களை அமையுங்கள்

1. வேகமாக/ஓடும்/முயல்/மிக

   ..............................

   ..............................

2. கண்டிக்கு/சென்றோம்/சுற்றுலா/நாம்

   ..............................

   ..............................

3. விரித்தாற்போல்/கடல்/நீலக் கம்பளம்/காட்சியளித்தது

   ..............................

   ..............................

4. நட்சத்திரங்கள்/வானில்/மின்னின/இரவு நேர

   ..............................

   ..............................







1. இந்தப் பந்துகளில் காணப்படும் நிறங்களைக் குறிப்பிடுக.

   ..............................

2. இரண்டு பந்துகளும் ஒரே அளவுடையவை. ஆனால், ஒரு பந்தில் கூடுதலாக இருக்கும் நிறமொன்றை, மறு பந்தில் மிகவும் குறைந்த அளவிலேயே காணக்கூடியதாக உள்ளது. அந்த நிறம் யாது?

   1. சிவப்பு 2. மஞ்சள் 3. வெள்ளை



3. பந்து என்ன வடிவத்தைக் கொண்டிருக்கும்?

   1. சதுர வடிவம் 2. கோள வடிவம் 3. உருளை வடிவம்

4. நான் எனது செல்லப்பிராணியுடன் பந்து ..............................

   1. விளையாடுவேன் 2. விளையாடும் 3. விளையாடுவோம்



1. மட்பாண்டங்கள் வனைவது எனது தொழிலாகும். என்னை எவ்வாறு அழைப்பார்கள்?

   ..............................



2. கடலுக்குச் சென்றோ அல்லது ஆற்றிலோ வலை வீசி மீன் பிடிப்பது எனது தொழிலாகும். நான் யார்? ..............................



3. விவசாய நிலங்களில் காய்கறிகள், தானியங்கள் பயிரிட்டு வருமானம் ஈட்டுகின்றேன். என்னை எவ்வாறு அழைக்கின்றனர்?


   ..............................



4. மரங்களிலிருந்து பலகை பெற்று, மரத்தளபாடங்கள் செய்வதே எனது தொழிலாகும். நான் யார்?

   ..............................

### பின்வரும் தாவரப் பகுதிகளை பெயரிடுங்கள்



- ஜீநு

noolaham.org | aavanaham.org

# பிறர் நம்மை நேசிக்கும்படி வாழ்வோம்



இன்றைய சமூகத்தில் பல்வேறு மனிதர்களை நாம் சந்திக்கின்றோம். ஒரு சில மனிதர்களின் சந்திப்பு எம்மில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தி விடுகின்றது. அது நல்ல விதமானதாகவும் இருக்கும்; சிலவேளைகளில் மோசமானதாகவும் இருக்கும். ஆனால், நம்மை பிறர் எப்போதும் நல்லவிதமாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் வகையிலேயே எமது செயற்பாடுகளும் சந்திப்புகளும் அமைய வேண்டும். அப்பொழுதுதான் அந்த சந்திப்புகள் விரும்பத்தக்கதாகவும் என்றும் மகிழ்ச்சியோடு நினைவுகூரத் தக்கதாகவும் இருக்கும்.

நாம் பிறரால் வெறுக்கப் படக்கூடியவர்களாக இருந்தோமானால், அது நமது துர்ப்பாக்கியநிலையாகவே அமையும். அப்போது, நம்மிடம் எவ்வளவுதான் பணவசதி, சொத்துக்கள், உறவுகள் இருந்தாலும் தனிமைப் படுத்தப்பட்டவர்களாக உணர்வோம். எனவே, பிறர் நம்மை நேசிக்க வேண்டுமானால், நற்குணங்களால் நம்மை அலங்கரித்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக, கல்வி கற்றவர்கள் மத்தியிலும் சிறந்த ஆற்றல் கொண்டவர்கள் மத்தியிலும் நல்ல எண்ணங்களும் சிறந்த பண்புகளும் அடங்கியிருப்பதனை அவதானித்திருப்பீர்கள். இதற்குக் காரணம், கற்ற கல்வி அவர்களை செம்மைப் படுத்தியிருக்கிறது. எனவே, சிறுவர்கள் தமது பாடசாலைப் பருவத்தை வீணாகக் கழிக்காமல், கல்வியை திறம்பட கற்றுக்கொள்ள வேண்டும். சிறந்த கல்வி கிடைத்தால், சிறந்தவர்களாக மாறுவோம்; பிறரால் மதிக்கப்படுவோம்.

மனதில் சிறந்த எண்ணங்களை வளர்த்துக்கொள்வதும் தீய குணங்களை அகற்றிக் கொள்வதும் முக்கியமான விடயங்களாகும். மனதில் சிறந்த எண்ணங்களை மட்டுமே குடியமர்த்தி வாழ்ந்து வந்தோமானால், நாம் தூய்மையானவர்களாகத் திகழ்வோம். அப்போது, சமூகம் நம்மை பின்பற்றி நடக்கும். நாம் பிறரால் நேசிக்கப்படுபவர்களாக இருப்போம்.



விஜய
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# தொலைபேசி நாகரிகம்



நாம் அதிகம் கவனிக்காத - ஆனால், கட்டாயம் கவனத்தில்கொள்ள வேண்டிய ஒரு விடயம்தான் 'தொலைபேசி நாகரிகம்' ஆகும். இன்றைய காலத்தில் சிறுவர்கள் மட்டுமன்றி, பெரியவர்களிடத்தில்கூட இந்த பண்பை அவதானிக்க முடிவதில்லை. எனவே, தொலைபேசி நாகரிகம் பற்றிய சிறியதோர் ஆலோசனையை உங்களுக்குத் தருகின்றோம்.

★ 'ஹலோ' என்ற வார்த்தையுடன் தொலைபேசி உரையாடலை ஆரம்பிக்கும் நாம், எடுத்த எடுப்பிலேயே ''யார் பேசுவது?'' என்று கேட்கக் கூடாது. நீங்கள் ஒருவருக்கு அழைப்பை ஏற்படுத்தியிருந்தால், முதலில் நீங்கள் யார் என்பதை தெரிவிக்க வேண்டும். அல்லது உங்களுக்கு வந்த அழைப்பாயின், ''யாருடன் பேச வேண்டும்?'' என்று பண்பாகக் கேட்க வேண்டும்.

★ அது பிறருக்கு வந்த அழைப்பாக இருந்தால், மறுமுனையில் பேசுபவரிடம் தயவுசெய்து காத்திருக்கும்படி கூறிவிட்டு, உரிய நபருக்கு தகவல் சொல்ல வேண்டும். மாறாக, தொலைபேசியை காதில் வைத்துக்கொண்டே உரிய நபரை சத்தமிட்டு அழைக்கக் கூடாது.



★ தொலைபேசி உரையாடல் முடியும் போது நன்றி, வணக்கம் போன்ற வார்த்தைகளுடன் முடிக்க வேண்டும்.

★ நீண்ட நேர - வீணான தொலைபேசி உரையாடல்களைத் தவிர்ப்பது நல்லது.

★ தவறுதலாக வரும் தொலைபேசி அழைப்புகளுடன் தேவையின்றி உரையாடக் கூடாது. அது தவறான அழைப்பு என்பதை தெரிவிக்க வேண்டும்.

★ எம்மில் சிலர் அறிமுகமற்ற தொலைபேசி இலக்கங்களை தேவையின்றி அழுத்தி மறுமுனையில் பேசுபவரை தொந்தரவுக்குட்படுத்தும் வழக்கத்தினை கொண்டுள்ளனர். இதனை தவிர்க்க வேண்டும்.

★ பொது இடங்களில் தொலைபேசி உரையாடல்



களை மேற்கொள்ளும்போது, குரலைத் தாழ்த்திக் கதைக்க வேண்டும். பலருக்கு மத்தியில் இருக்கும்போது ஸ்பீக்கரை இயக்கி கதைப்பதை தவிர்க்க வேண்டும்.

★ 'தொலைபேசி பயன்படுத் தக்கூடாது' என அறிவிப்பு





விடுக்கப்பட்டுள்ள இடங்களில் தொலைபேசி அழைப் புகளை ஏற்படுத்தக் கூடாது.

★ சாப்பிட்டுக்கொண்டு தொலைபேசியில் உரையாடுவதைத் தவிர்க்க வேண்டும்.

★ பாதைகள், தண்டவாளங்களுக்கருகில் பயணிக்கும்போதும் வாகனத்தை ஓட்டிச் செல்லும்போதும் தொலைபேசி உரையாடல்களை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

★ பிறருடன் கதைத்துக் கொண்டிருக்கும்போது, தொலைபேசி அழைப்புக்கள் வந்தால், 'மன்னிக்கவும்' என்று கூறிவிட்டு அழைப்பாளருடன் கதைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீக்ரட் சிக்ஸ்
## இரகசிய குழு...

"சரி முதலில் இங்கிருந்து நாம் வெளியேறுவோம்" அருண் கட்டளையிட்டான். அனைவரும் வீடு போய்ச் சேர்ந்தனர்.

"டேய், அருண் வானத்தில் ஏதோ, புதுசா ஒரு பொருள் தெரிஞ்சுதாமே... பாத்தியா?" வீட்டில் அம்மாவும் அதைத் தான் கேட்டார்.

"ஒரு கோடு போட்ட மாதிரி, மலை உச்சிக்கும் அந்தப் பறக்கின்ற பொருளுக்கும் நடுவில்.... பிரகாசமாக இருந்துச்சு... மலை உச்சியில என்னம்மா இருக்கு?" அருண் ஆர்வத்துடன் கேட்டான்.

"முந்தி வெள்ளைக்காரர்கள் பயன்படுத்தின வீடு. ரொம்பப் பெரிசாக இருக்கும்; மாளிகை மாதிரி. மாரிமுத்து ஐயாதான் அங்க தோட்ட வேலை செய்தார். இப்போ எப்பிடியோ தெரியலை."



03

"இப்போ அங்கே யாரும் இல்லையா...?"

"இல்லை என்றுதான் நினைக்கிறேன். அப்பப்போ வெள்ளைக்காரங்க இங்கிலாந்தில் இருந்து வந்து, கொஞ்சக்காலம் தங்கிட்டுப் போவாங்க..."

அன்று இரவு படுக்கையில் நித்திரை இன்றித் தவித்தான் அருண்... சரியாக மலை உச்சிக்கு ஏன் அந்த ஒளி சென்றது?

**மர்ம ஒளி பரப்பியது செவ்வாய்க்கிரக மனிதர்களா...? உண்மையை கண்டறிய களம் இறங்கிய குழு...**

உண்மையில் அந்தப் பறக்கும் பொருள் என்ன? கேள்விகளுக்கு அருணால் விடை காண முடியவில்லை.

அப்படியே அசந்து தூங்கிப் போனான்.

அடுத்த நாள் காலை, வழமைபோல் மலைக் கோட்டை பக்கம் விறகு பொறுக்கச் சென்றார்கள் சில ஊர் சிறுவர்கள். இங்கொன்றும் அங்கொன்றுமாக சிதறிக்கிடந்த குச்சிகள், மரக்கிளைகள், கட்டைகளைத் தேடி எடுத்துக்கொண்டே கோட்டை மலை அடிவாரம் வரை சென்றனர்.

**தொடர்கதை...**


"டேய்...! அங்க பார்... மேலே நிறைய விறகுகள் இருக்கு. வா போவோம்..."

"வேணாம்... வேணாம்! அம்மா அங்கெல்லாம் போக வேண்டாம் என்று சொல்லியிருக்காங்க"

"நீ வேணுமென்றால் இரு. நாங்கள் போறோம்..." என்று கூறியவாறு ஒரு மூன்று, நான்கு சிறார்கள் மலையேறினார்கள். மேலே செல்லச் செல்ல புதர்களும், செடிகளும், பெரிய மரங்களும் அடர்ந்து வளர்ந்திருந்தன. திடீரென்று ஒரு பெரிய இரைச்சல் கேட்டது.

(தொடரும்)

# உயிர்களை மதி



ஓர் ஊரில் செல்வந்தரான முருகன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் அதிகமான பயணங்களை பல்லக்கில் தான் செல்வார். இதற்காகவே எட்டு ஆட்களை பல்லக்குத் தூக்கிகளாக வேலைக்கு வைத்திருந்தார்.

ஒரு நாள் முருகன் ஒரு திருமண நிகழ்விற்கு பல்லக்கில் சென்று திரும்பும்போது, பசு ஒன்று தன் கன்றுக் குட்டியை காணவில்லை என்று தவித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனேயே பசு அருகே பல்லக்கை இறக்கும்படி பல்லக்குத் தூக்கிகளுக்கு கட்டளையிட்டார். பின்னர் பல்லக்குத் தூக்கிகளை அழைத்து அந்த பசுவின் கன்றை தேடுமாறு கூறினார்.

அதற்கு பல்லக்குத் தூக்கிகள் "நாங்கள் பல்லக்குத் தூக்கும் பணிக்கு மாத்திரமே பணிக்கப்பட்டுள்ளோம், பிற வேலைகளை எம்மால் செய்ய முடியாது" என்று பதலளித்தனர்.

சிறிது நேரம் யோசித்த முருகன். பின்னர் "சரி பல்லக்கைத் தூக்குங்கள்" என்றார். "முதலில் இங்கிருந்து கிழக்கு நோக்கி செல்லுங்கள்" என்றார். செல்லும் பாதையில் கன்றுக்குட்டி எங்காவது கண்ணில் புலப்படு கிறதா என்று தேடினார். ஒன்றும் புலப்படவில்லை. "மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே பல்லக்கை திருப்புங்கள்" என்றார். இவ்வாறு ஏனைய திசைகளுக்கும் பல்லக்கைக் கொண்டு செல்லுங்கள் என பணித்தார் முருகன். அதனால் பல்லக்குத் தூக்கிகள் சோர்வடைந்தனர்.

"ஐயா நாங்கள் கன்றை தேட மாட்டோம் என்று சொன்னதற்காக இப்படி எங்களை பழி வாங்குகிறீர்களா?" என்று பல்லக்குத் தூக்கிகள் கூறினர். "என்னப்பா இப்படி சொல்கிறீர்கள் உங்களுக்கு கஷ்டம் தரக்கூடாது என்று தான் முதலில் கன்றை தேடிக் கொண்டு வாருங்கள் என்று கூறினேன். நீங்கள்தான் குறிப்பிட்ட வேலையை தவிர மற்ற வேலைகளை செய்ய இயலாது என்றீர்கள். பிறகு நானே தேடப் புறப்பட்டு விட்டேன், அதில் என்ன தவறு இருக்கு?" என்று பதலளித்தார் முருகன்.

இறுதியாக வடக்கு திசை நோக்கி செல்லும்போது, கன்றுக்குட்டி கண்ணுக்கு அகப்பட்டது. மிகவும் மகிழ்ச்சியடைந்த முருகன், கன்றுக்குட்டியை தாய் பசுவிடம் சேர்த்து வைத்தார். அத்தோடு பல்லக்குத் தூக்கிகளை நோக்கி "ஒவ்வொருவராக நாலாதிசைக்கும் சென்றிருந்தால் இவ்வளவு கடினமாக இருக்காதுதானே நம்மைப் போன்று அனைத்து உயிரினங்கள் மீது அன்பு கொள்ளவேண்டும். இப்போது பாருங்கள் தாய் பசுவின் ஆனந்தத்தை.... இனியாவது சூழ்நிலைக்கேற்ப அனைத்து வேலைகளையும் திறம்பட செய்யவேண்டும் என்று சிந்தியுங்கள்" என்றார் முருகன். இதனைக் கேட்ட பல்லக்குத் தூக்கிகள் தாம் செய்த தவறுக்கு முருகனிடம் மன்னிப்புக் கேட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பிரஜைகளை உருவாக்கும் பணி ஆசிரியர்களின் கைகளில்





## ஒக்டோபர் -06 உலக ஆசிரியர் தினம்

உலகில் ஆசிரியர் தொழிலை 'ஆசிரியர் சேவை' என்று அழைப்பதற்கு காரணம் அப்பணியின் மகத்துவமே ஆகும். ஆசிரியர் என்றால் குற்றம் நீக்குபவர் என்றும் ஒரு பொருளுண்டு. அதற்கேற்ப அவர் மாணவர்களின் குற்றம் கலைந்து அவர்களைப் புடம் போட்ட தங்கங்களாக்குகின்றனர்.

எனவே, ஆசிரியர் பணியானது, மிகவும் கௌரவத்திற்குரியது. கல்வியின் மூலம் சிறந்த நற்பிரஜையை உலகிற்கு வழங்கிவரும் ஆசிரியரானவர் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை நறிப்படுத்துவதால், இச்சேவையை மதித்து உலக அனைத்து நாடுகளும் சர்வதேச தினமாக ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுகின்றார்கள்.

### ஆசிரியர் தினப் பிரகடனம்

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பு (UNESCO) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆகியன 1994 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய, 1994 ஆம் ஆண்டிலிருந்து ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி உலக ஆசிரியர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. எனினும், இலங்கையில் ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதியே ஆசிரியர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இன்று சுமார் 42 லட்சம் மாணவர்களுக்கு இரண்டு லட்சத்து நாற்பதாயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்கள் சுமார் பத்தாயிரம் பாடசாலைகளில் பணியாற்றுகின்றனர். நமது நாட்டில் உள்ள தொழில்களில் பாரியளவிலான மனித வளங்களை தன்னகத்தே கொண்டுள்ள துறையினராக ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

### ஆசிரியர் குறித்து சான்றோர் கூற்று

''பிள்ளைகளை வருத்துவதை விட்டு விட்டு இயற்கையோடு அவர்கள் தாமாகவே தத்தமது இயல்புகளுக்கேற்றவாறு கல்வியறிவை பெறுவதற்கு ஆசிரியர்கள் உதவ வேண்டும்''

என தத்துவ ஞானியான ரூஸோ கூறுகின்றார்.

### நல்லாசிரியரின் பண்புகள்

- ★ அதிபரோடு ஒத்துழைப்பவர்.
- ★ ஆசிரியர் குழாத்தோடு சிறந்த தொடர்பினை கொண்டவர்.
- ★ மாணவர்களின் சிறந்த ஆலோசகர்.
- ★ கற்பித்தலை ஆயத்தத்துடன் மேற்கொள்பவர்.
- ★ தமது தொழில்சார் திறன்களை மேம்படுத்த முனைபவர்.
- ★ மாணவர் மற்றும் பாடசாலையின் விருத்திக்காக உயர் அர்ப்பணிப்புகள் செய்பவர்.



எனவே, பல்வேறு கருமங்களில் தன்னை ஈடுபடுத்துகின்றபோது, அவர் சிறந்த ஆசிரியராக சமுதாயத்தில் மிளிர்கின்றார். இத்தகைய பண்புகளையும் திறமைகளையும் கொண்ட ஆசிரியர்களை பாடசாலை மட்டத்திலும் சமூக மட்டத்திலும் பாராட்டிக் கௌரவப்படுத்த வேண்டும்.

அதேவேளை, சிறந்தவொரு மாணவரை உருவாக்க வேண்டுமென்பதே ஒவ்வொரு ஆசிரியரதும் எதிர்பார்ப்பாகும். ஆகவே, ஆசிரியர்களின் சொல் கேட்டு நல்வழி நடந்து உயர்வு பெறுவோம். உயர் வாழ்விற்கு வழிவகுக்கும் ஆசிரியரை என்றும் மதித்திடுவோம்.

(-அ)

## குண்டூசி

ஆரம்ப காலத்தில் சப்பாத்தி முள்ளையும் கூர்மையான எலும்புத் துண்டுகளையும் குண்டூசிகளாகப் பயன்படுத்தி வந்தனர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட எகிப்திய கல்லறைகளில் அழகான வேலைப்பாடுகள் அமைந்த வெண்கலக் குண்டூசிகள் இருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டன. ரோமானியர்கள் வெண்கலக் கம்பிகளை வளைத்து குண்டூசிகளாகப் பயன்படுத்தினர். இக்குண்டூசிகள் ஒரு பக்கம் கூர்மையாகவும் மற்றொரு பக்கம் வளைந்தும் காணப்படும்.



வோல்டர் ஹன்ட்

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த வோல்டர் ஹன்ட் என்பவர்தான் முதன்முதலாக இயந்திரம் மூலம் குண்டூசிகள் செய்யும் முறையைக் கண்டுபிடித்தார். இக் கண்டுபிடிப்பு 1849 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. முதன்முதலாக இரும்பு, பித்தளை முதலிய உலோகங்களைக் கொண்ட கம்பிகளைப் பயன்படுத்தி குண்டூசிகள் தயாரிக்கப்பட்டன. ஒரு பக்கம் கூர்மையாகவும் மறுமுனை வட்ட வடிவமாகவும் இந்த குண்டூசிகள் தயாரிக்கப்பட்டன.

(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தம்பதெனி

## (கி.பி. 1232 தொடக்கம் 1272 .

இலங்கையின் புராதன வரலாற்று நிகழ்வுகளில் தம்பதெனிய மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு அடிகோலிய கலிங்க மாகனை தோற்கடித்த பெருமை விஜயபாகு அரச வம்சத்தினருக்கே உண்டு. அதன்பின்னர் இந்த யுகத்தில் தலதா தந்ததாதுவைப் பாதுகாப்பதிலும், இலக்கிய வளர்ச்சியிலும் தம்பதெனிய யுகம் முனைப்போடு பல சாதனைகளை புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த சாதனைகளை இன்று ஆராய்வோம்.

### அநுராதபுரம் - பொலன்னறுவை யுகத்தின் வீழ்ச்சி

அநுராதபுரம்- பொலன்னறுவை யுகங்களின் வீழ்ச்சிக்கு சோழ, பாண்டிய, கலிங்க படையெடுப்புகளே பிரதான காரணமாகும். இந்த படையெடுப்புகளால் அன்று அநுராதபுர, பொலன்னறுவையைச் சேர்ந்த பல சிங்கள மன்னர்கள் பலர் தமது ஆட்சி அதிகாரத்தை இழந்தனர். இதன்போது, நிகழ்ந்த கசப்பான பெறுபேறுகளோ பல. அவையாவன.

★ அநுராதபுரம்- பொலன்னறுவை இராசதானியோடு விவசாயமும் நீர்வள நாகரிகமும் அழிந்தன.

★ சமய, கலாசார, சமூக பாதிப்புக்கள் ஏற்பட்டன.

★ சிங்கள, தமிழ் கலாசாரக் கலப்புகள் ஏற்பட்டன.

★ இலங்கையின் தலைநகர் தென்மேற்கு நோக்கி இடம்பெயர ஆரம்பித்தமை.

★ இராசரட்டையில் சிங்கள மக்களின் தொகை குறைவடைதல்.

★ விவசாயம் கைவிடப்பட்டு நிலங்கள் காடடர்ந்தமையால் கொடிய விலங்குகள் பெருகின.

★ மலேரியா உள்ளிட்ட பல நோய்கள் தோன்றின.

★ சமய வழிபாட்டில் தேக்க நிலை.

மேற்குறித்த பல்வேறு காரணங்களால் பொலன்னறுவை இராசதானி கைவிடப்பட்டு தலைநகரம் தம்பதெனியாவுக்கு மாற்றப்பட்டது.

### கலிங்க மாகனின் அதிகாரம் ஒழிப்பு

கலிங்க மாகனின் கொடூரமான ஆட்சியினால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்தனர்.

இக்கால கட்டத்தில் பிராந்திய ரீதியில் ஆட்சி நடத்தி வந்த சில தலைவர்கள் குன்றுகளின் உச்சிகளில் தமது கோட்டைகளை அமைத்து மக்களையும் பௌத்த மதத்தையும் முடியுமான வரையில் பாதுகாத்துக்கொள்வதற்கு முயற்சித்தனர். இந்தப் பிராந்திய தலைவர்கள் கிழக்கு 'கோவிந்தஹெல', தற்போதைய யாப்பஹுவ பிரதேசமான 'சுப்பர்வத', மினிப்பே, தம்பதெனிய பர்வத போன்ற பிரதேசங்களில் தமது கோட்டைகளை அமைத்து மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்தனர். இப்பிரதேசங்களைத் தவிர்த்து வன்னியிலும் ஒரு பிரதேச ஆட்சி நிலவியது.

இக்காலகட்டத்தில் கலிங்க மாகனை தோற்கடிக்க தம்பதெனியாவில் தோன்றியவன்தான் மூன்றாம் விஜயபாகு. அவன் 'வன்னி ராஜா' என்றும் அழைக்கப்பட்டான். அதன்படி அவன் தம்பதெனியாவின் மன்னனாக முடிசூட்டும் முன்னரே, வன்னிப் பிரதேசத் தலைவனாக இருந்தமை புலப்படுகின்றது. இக்காலகட்டத்தில் பெரும் படையொன்றைத் திரட்டி பெலிகல மலைப்பிரதேசத்தை தலைமையகமாகக் கொண்டு யுத்தத்தை ஆரம்பித்தான். அவ்வேளை மாயரட்டை வரை முகாமிட்டிருந்த கலிங்க மாகனை பொலன்னறுவைக்கு விரட்டினான். மாகன் படிப்படியாக



பலவீனமடைந்து தனது ஆட்சி அதிகாரத்தை இழக்கும் போது, அரசியல் ஸ்திரநிலையில் இருந்த மூன்றாம் விஜயபாகு தம்பதெனியா மன்னனானான். இந்நிகழ்வு கி.பி 1232 இல் நிகழ்ந்தது. எனினும், கலிங்க மாகனை முற்றாகத் துரத்தியடிக்கும் வல்லமை மூன்றாம் விஜயபாகுவிடம் இருக்கவில்லை. மாகனின் ஆட்சியில் நலிவடைந்த மக்களுக்கு மூன்றாம் விஜயபாகு அடைக்கலம் கொடுத்ததோடு, கலிங்க மாகனுக்கு எதிராக போராடும் பொருட்டு மக்களை அணிதிரட்டினான்.


### மூன்றாம் விஜயபாகு

மூன்றாம் விஜயபாகு மன்னன் பிராந்திய தலைவர்களின் உதவியுடன் ஆட்சியை நிலைநாட்டி தம்பதெனிய குன்றில் தனது இராச்சியத்தை அமைத்தான். கொத்மலையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த புனித தந்ததாதுவை கேகாலை பெலிகல தலதா மாளிகையில் பாதுகாப்பாக வைத்தான்.

மூன்றாம் விஜயபாகுவின் ஆட்சிக்காலம் கி.பி. 1232 முதல் 1236 வரை நீடித்தது. இதன்போது தம்பதெனியாவில் விஜய சுந்தரராமய, வத்தளையில் விஜயபா விகாரை ஆகிய பௌத்த வழிபாட்டுத் தலங்களை நிறுவினான். அத்தோடு, உப சம்பதா சமய நிகழ்வுகளுக்கு தலைமை வகித்தான். களனி விகாரை, தொட்டகமுவ விஜயபா பிரிவினை உள்ளிட்ட பல விகாரைகளை புனருத்தாரணம் செய்தான்.

### இரண்டாம் பராக்கிரமபாகு

மூன்றாம் விஜயபாகுவுக்குப் பின்னர் அவனது மூத்த புதல்வனாகிய இரண்டாம் பராக்கிரமபாகு 1236 ஆம் ஆண்டளவில் தம்பதெனியாவிற்கு அரசனானான். இவனது ஆட்சிக் காலம் 34 வருடங்கள் நீடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பராக்கிரமபாகுவின் சகோதரர் களாகிய புவனேகபாகுவும் வீரபாகுவும் வழங்கிய பூரண ஒத்துழைப்போடு, மாகனை வெற்றி கொண்டனர். அதனால், மாகனின் ஆட்சி அதிகாரத்தை கி.பி 1255 இல் முழுமையாக ஒழித்தனர்.

### தம்பதெனியாவில் தலதா மாளிகை

தம்பதெனியாவில் சிறிய தலதா மாளிகை


# ...ய யுகம்

## ...ஆம் ஆண்டுகள் வரை)

நோக்குடனேயே படையெடுப்பு நிகழ்ந்திருக்கலாம் என வரலாற்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

### இரண்டாம் பராக்கிரமபாகுவின் மேலும் பல சேவைகள்

களனி விகாரை, பெந்தோட்டை விகாரை, தெவிநுவர உபுல்வன் தேவாலயம் ஆகிய வற்றை புனர்நிர்மாணம் செய்தான். இம்மன்னனால் எழுதப்பட்ட "விசுத்தி மார்க்க சன்னய" என்ற நூலும் 'கவிசிலுமின' என்ற காவியமும் முக்கியமானவை. இலக்கியவாதிகளுக்கு அரச உதவிகளைப் பெற்றுக் கொடுத்தான். இம்மன்னனின் உதவியுடன் 'தம்பதெனி கதிகாவத' என்ற நூல் எழுதப்பட்டது. அத்தோடுர, புத்த புத்ர என்ற பிக்குவால் "பூஜாவலிய" என்ற நூலும் எழுதப்பட்டு புத்துயிர் அளிக்கப் பட்டது.






### கலிங்க மாகனை தோற்கடித்தல்

இரண்டாம் பராக்கிரமபாகு ஆட்சியை பொறுப்பெடுக்கும் போது, மாகனின் கேரளப் படையினர் பொலன்னறுவை, திருகோணமலை, கந்தளாய், மன்னார், ஊர்காவல்துறை ஆகிய இடங்களில் முகாமிட்டிருந்தனர். கலிங்க மாகனின் பெரும் படைக்கு முகம்கொடுக்கும் அளவுக்கு தம்மிடம் படை பலம் இல்லாததால் இரண்டாம் பராக்கிரமபாகு பாண்டிய மன்னனாகிய ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் மன்னனின் படையுதவியை பெற்றதாக தென்னிந்திய கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இரண்டாம் ஒன்றை நிறுவிய பெருமை இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனையே சாரும். பெலிகலயில் இருந்த புனித தந்த தாதுவை தம்பதெனியாவில் நிர்மாணிக்கப்பட்ட தலதா மாளிகைக்கு கொண்டுவந்து பேணிப் பாதுகாத்தான்.

### சந்திரபானுவின் ஆக்கிரமிப்பு

இரண்டாம் பராக்கிரமபாகு அரசாட்சி காலத்தில் மலாயா தீபகற்பத்திலிருந்து வந்த சந்திரபானு மன்னனின் ஆக்கிரமிப்பினையும் எதிர்கொள்ள நேரிட்டது. அவன் பௌத்த நாடு ஒன்றின் ஆட்சியாளனாக இருந்த அதேவேளை, புனித தந்த தாதுவை அபகரிக்கும்

### தம்பதெனிய இராச்சியத்தின் வீழ்ச்சி

1271 ஆம் ஆண்டில் இரண்டாம் பராக்கிரமபாகு இறக்க நான்காம் விஜயபாகு முடிசூடிக்கொண்டான். இவனது ஆட்சிக்காலம் இரு வருடங்களே நீடித்தன. கி.பி 1272 ஆம் ஆண்டில் 'மித்திரன்' எனும் தளபதி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற எத்தனித்தான். எனினும், அவன் அரசவம்சத்தைச் சார்ந்தவன் அல்ல என்பதால் சில படைத்தளபதிகள் மித்திரனை எதிர்த்தனர். அவர்கள் நான்காம் விஜயபாகுவின் சகோதரனாகிய புவனேகபாகுவை தம்பதெனிய மன்னனாக்க முயற்சித்தனர். இத்தகைய பல இழுபறிகளால் தம்பதெனிய இராச்சியம் 1272 ஆம் ஆண்டளவில் முடிவுக்கு வந்தது. இதன்படி தம்பதெனிய யுகத்தின் மொத்த ஆயுட்காலம் 40 ஆண்டுகள் மாத்திரமே நிலைகொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

- இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: ..............................................

01) சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

01. பருத்தி நூல் எதிலிருந்து பெறப்படுகின்றது?

1. பருத்திப் பஞ்சு 2. செம்மறி ஆடு
3. பட்டுப்பூச்சி

02. அம்மை நோய் ஏற்படும்போது பாரம்பரியமாக அரைத்துப் பூசும் மூலிகை யாது?

1. துளசி 2. வேம்பு 3. வெற்றிலை

03. குழுவாக செய்யும் வேலை யாது?

1. கிரிக்கெட் 2. நெல் தூற்றுதல் 3. வண்டி ஓட்டுதல்

04. பலாப்பழப் பிசினைப் போக்கப் பயன்படும் எண்ணெய் யாது?

1. கிறீஸ் 2. தேங்காய் எண்ணெய்
3. எண்ணெய்

05. பின்வருவனவற்றுள் சூழலை மாசடையச் செய்யாத வாகனம் எது?

1. பேரூந்து 2. லொறி 3. ஈருருளி

06. தாவர உணவை மட்டும் உட்கொள்ளும் பிராணி எது?

1. மாடு 2. கோழி 3. காகம்

07. வல்லாரைச் சம்பல் தயாரிக்கும்போது, எலுமிச்சைப் புளி சேர்ப்பதால் உடலுக்குக் கிடைக்கும் நன்மை யாது?

1. கொழுப்பு 2. புரதம் 3. விற்றமின் C

08. பலூன், அழிறப்பர், டயர் போன்ற பொருட்களைத் தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள் யாது?

1. பிளாஸ்டிக் 2. றப்பர் 3. தாவரக் கூழ்

09. நெல் அறுவடையை எப்போது செய்வார்கள்?

1. நெற்கதிர்கள் காய்ந்த பின்னர்
2. வெயில் காலங்களில்
3. நெற்கதிருக்கு அடுத்து இருக்கும் இலைகள் மஞ்சள் நிறமான பின்னர்

10. நகர்ப்புறங்களில் எவ்வேளைகளில் வாகன நெருக்கடி ஏற்படுகிறது?

1. காலையும் மாலையும் 2. காலையும் இரவும்
3. பகல்வேளைகளில்




11. காந்தத்தின் அருகே கொண்டு செல்லப்படும்போது, பின்வருவனவற்றுள் எது கவரப்படும்?

1. கந்தகம் 2. மரக்கட்டை 3. குண்டூசி

12. உடற்பயிற்சி செய்ய முன்னர் நாம் செய்ய வேண்டியது?

1. உடலைத் தளர்த்துதல் 2. நன்கு உணவு உண்ணுதல்
3. அதிக நீர் அருந்துதல்

13. இலங்கையில் அதிகளவு மின் பெறப்படுவது?

1. நீர்மூலம் 2. மழைமூலம் 3. பெற்றோல்மூலம்

14. வாள் உபயோகப்படுத்தும் தொழிலாளி யார்?

1. மேசன் 2. தச்சன் 3. கொல்லன்

15. கமக்காரனுக்கு உதவி புரியும் பிராணி பின்வருவனவற்றுள் எது?

1. கிளி 2. செண்பகம் 3. நத்தை

01) பின்வரும் வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளம் இடுக.

01. கிழங்கு வகைகளில் அதிகளவு விற்றமின்கள் உண்டு. (----)

02. எள்ளில் இருந்து நல்லெண்ணெய் பெறப்படுகின்றது. (----)

03. கரும்பு ஆணிவேர்த் தொகுதியைக் கொண்டது. (----)

04. குழுவாக வேலை செய்யும்போது நேரம், உழைப்பு மீதமாகும். (----)

05. வாழை, வாழ்நாளில் பல தடவைகள் பூக்கும். (----)

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## கணிதம்

(செப்டெம்பர் 28 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

*01)* 1. 3 3. 2 5. 1 7. 2 9. 2
2. 1 4. 2 6. 3 8. 1 10. 1

*02)* 1. 998, 1000 2. 3533
3. 1520ml அல்லது 1l 520ml
4. 3kg 750g அல்லது 3750g
5. $\frac{1}{2}$

Digitized by Noolaham Foundation.

ஊடக பாடநெறி பாகம்-II
பாடம் - 124



# தொலைக்காட்சியில் அரசியல் தொடர்பான தணிக்கை முறை

கடந்த வாரம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தணிக்கை முறை கையாளப்படும் விதம் குறித்து ஆராய்ந்திருந்தோம். அதில் குறிப்பாக, பொதுவான தணிக்கை முறைகள் பற்றியே குறிப்பிடப்பட்டிருந்தது.அதற்கு அடுத்தபடியான தணிக்கை முறைதான் அரசியல் சார்ந்த தணிக்கை முறையாகும். அதுபற்றி இவ்வாரம் ஆராய்வோம்.

அதாவது, அரசியல் விடயதானங்களை அடியொட்டிய தணிக்கை முறையானது, மூன்று வகைகளில் அமைவதுண்டு.

ஒன்று: சுய தணிக்கை


இரண்டு: அடிப்படை அறிவுறுத்தல்களுக்கு அமைவான தணிக்கை

மூன்று: சட்டரீதியிலான அல்லது அரசாங்கத்தின் ஆணையின் கீழான தணிக்கை. என்பனவே அவையாகும்.

## சுய தணிக்கை

சுய தணிக்கை எனும்போது






குறித்த தொலைக்காட்சி நிறுவனங்கள் தத்தமது தனிப்பட்ட சில கொள்கைகளுக்கு மாறான விடயங்களை தணிக்கை செய்வதையும், பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடியவை என ஊகிக்கும் விடயங்களை தாமாகவே ஒளிபரப்பிலிருந்து தணிக்கை செய்வதையும் இந்த முறையில் அடக்கலாம். இதனை ஒருவிதத்தில் முன் ஜாக்கிரதையான செயற்பாடாகவும் கருத முடியும். உதாரணத்திற்கு குறித்த தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வர்த்தக ரீதியில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை இழப்புகளை தவிர்ப்பதற்காக இவ்வாறான செயல்களைக் கையாள்வதுண்டு.

## அடிப்படை அறிவுறுத்தல்

நாட்டில் ஆட்சி நடத்துகின்ற அரசாங்கமானது, அரச நிர்வாகத்திற்கோ, தனிப்பட்ட ரீதியில் அரசியல் தலைவர்களுக்கோ, கிண்டல் செய்தலையோ, அவதூறான விடயங்களை ஒளிபரப்புவதையோ, அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறான விடயங்களை ஒளிபரப்புவதையோ தவிர்க்குமாறு அறிவுறுத்தல்கள் விடுக்கும் தணிக்கை முறையே இந்த வகைக்குள் சேரும்.

உதாரணத்திற்கு, ஒரு அரசாங்கத்தை நேரடியாக விமர்சிக்கும்போது, அது அந்த அரசாங்கத்தை நடத்தும் கட்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதாலும், தனிப்பட்ட ரீதியில் அரசியல்வாதிகளின் கௌரவத்திற்கு இழுக்கை ஏற்படுத்தலாம் என்பதாலும் அதிலிருந்து ஓர் அரசாங்கமானது, ஆட்சியையும், அபிமானத்தையும் தக்க வைத்துக் கொள்வதற்காக சில அறிவுறுத்தல்களை வேண்டுகோளாகவோ, மறைமுக அறிவுறுத்தல்கள் ஊடாகவோ, தணிக்கை செய்யத் தூண்டும் வழிமுறையை இதில் அடக்கலாம்.

## சட்ட ரீதியான தணிக்கை

சட்ட ரீதியிலான தணிக்கை முறை என்பதானது, நாட்டில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள நிலையில் பிரச்சினையை தணியச் செய்வதற்காக சில தணிக்கைகளை அரசாங்கம் சட்டதிட்டங்களுக்கு அமைவாக தணிக்கை சட்டத்தை அமுல்படுத்தும் சந்தர்ப்பமே இதுவாகும். சில செய்திகள், தகவல்கள், பேட்டிகள், காட்சிகள், விவாதங்கள் போன்றவை நாட்டில் கிளர்ச்சிகளை, கலவரங்களை அல்லது முரண்பாடுகளை ஏற்படுத்தலாம் என கருதப்படும் பட்சத்தில் சட்டவிதிகளுக்கமைய அரசாங்கமானது, இந்த தணிக்கை முறையை அமுல்படுத்தும்.

உதாரணத்திற்கு கட்சி முரண்பாடுகளை ஏற்படுத்தல், இனங்களுக்கிடையே பிரச்சினைகளை தோற்றுவித்தல், மக்களை தவறாக வழிநடத்தும் தகவல்கள், வதந்திகளைப் பரப்புதல், தலைமைகளை அவமதிப்பு செய்தல் போன்றவற்றை இவ்வாறான தணிக்கை ரகத்தினுள் சேர்க்கலாம். மேற்படி மூன்றாவது ரக தணிக்கைக்கு விரும்பியோ, விரும்பாமலோ ஒவ்வொரு தொலைக்காட்சி நிறுவனமும் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. இல்லையேல் இதனை மீறினால் ஒளிபரப்பு உரிமையை இழக்கக்கூடிய நிலைமைக்கும் அவை உள்ளாகலாம்.

(தொடரும்)

- ரிஷபன்

---

நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்
உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்!

உன்னால் சாதிக்க இயலாத
காரியம் என்று எதுவும் இருப்பதாக
ஒருபோதும் நினைக்காதே!

நான் எதையும் சாதிக்க
வல்லவன் என்று சொல்.
நீ உறுதியுடன் இருந்தால்
பாம்பின் விஷம்கூட
சக்தியற்றது ஆகிவிடும்!

பலமே வாழ்வு
பலவீனமே மரணம்!



சுவாமி விவேகானந்தர்

---

## விசித்திர இல்லம்




வியாட்நாமின் தலாட் எனும் நகரப் பகுதியில் விசித்திரமான இல்லமொன்று அமைக்கப்பட்டுள்ளது. தேவதைக் கதைகளில் வருவது போன்ற இயற்கையான பொருட்களைக் கொண்டு இந்த இல்லம் அமைக்கப்பட்டுள்ளமையே இதன் சிறப்பம்சமாகும்.

noolaham.org | aavanaham.org

# ஓய்வும் பொழுதுபோக்கும்

# பலூன் வாகனம்

இன்று நாம் அனைத்து தரப்பினரையும் மகிழ்விக்கும் விளையாட்டுப் பொருவொன்றை குறைந்த செலவில் தயாரிக்கப் போகின்றோம்.




**தேவையான பொருட்கள்:**

1. பிளாஸ்டிக் போத்தல் -1
2. போத்தல் மூடிகள்- 4
3. குச்சிகள் -2
4. குழாய் -1
5. பலூன்-1
6. செலோடேப்
7. போத்தலில் துளையிடக் கூடிய ஏதேனும் ஒரு கூர்மையான ஆயுதம்.



**முதலில்:** சக்கரங்களைப் பொருத்த வேண்டிய இடங்களை போத்தலின் அகலத்தில் அடையாளம் இட்டு துளைகளை இடுக.

**இரண்டாவதாக:** படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, துளையினுள் குச்சிகளை செலுத்தி, அதனுடன் நான்கு சக்கரங்களை பொருத்திக் கொள்ளுங்கள். போத்தலின் நடுவில் குழாயினை செலுத்துவதற்காக துளைகள் இரண்டினை இடுங்கள். போத்தல் உட்செலுத்திய குழாயின் ஒரு மூலையில் பலூனைப் பொருத்தி, அதனைச் சுற்றி செலோடெப்பினை ஒட்டிக் கொள்ளவும்.



தற்போது பலூன் வாகனத்தினை தயாரித்து விட்டோம். அதனை இயக்குவதற்கு குழாயின் திறந்த மூலையை பிடித்து பலூனை ஊத வேண்டும், பலூன் பெரிதானவுடன் கைவிட வேண்டும்.

நாம் பலூனை ஊதி கைவிடும்போது, பலூனில் உள்ள காற்று வெளிப்படும் திசைக்கு எதிராக வாகனம் பயணிப்பதை நீங்கள் அவதானிக்க முடியும். அத்தோடு, நாங்கள் அறிமுகப்படுத்திய மூலப்பொருட்களுடன் பிற மாற்றீடுகளைப் பயன்படுத்தியும் பலூன் வாகனத்தினை அழகாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

**இங்கு காட்டப்பட்டுள்ள படத்தில் அவ்வாறான புதிய சிந்தனைகள் உள்ளன.**

# தெரிந்து கொள்வோம்



★ Discovery of India என்ற நூலின் ஆசிரியர் யார்?

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவர்ஹர்லால் நேரு



★ செக் குடியரசின் தலைநகரம் எது?

பிராக்



★ பின்வரும் உலக வங்கிகளின் தலைமையகங்கள் எங்கு அமைந்துள்ளன?

i. ஆசிய அபிவிருத்தி வங்கி - பிலிப்பைன்ஸிலுள்ள மணிலா
ii. சர்வதேச நாணய நிதியம் - ஐக்கிய அமெரிக்காவிலுள்ள வோஷிங்டன்



★ ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்பன யாரால் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

i. ஐ.தே.கட்சி - டி.எஸ்.சேனநாயக்க அவர்களால் 1946
ii. ஸ்ரீ.ல.சு.கட்சி - S.W.R.D. பண்டாரநாயக்க அவர்களால் 1951

★ நெல்லின் உள்ளீடு அரிசி என்பதுபோல பின்வருவனவற்றின் உள்ளீடுகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

i. பலா - சுளை
ii. கற்றாளை - சோறு
iii. சோயா - பருப்பு
iv. மாதுளை - முத்து
v. மாங்காய் - சதை



★ பிரான்ஸ் அரசாங்கத்தால் வருடாந்தம் வழங்கும் 'செவாலியே விருதை' 2016 ஆம் ஆண்டில் பெற்றுள்ள இந்திய நடிகர் யார்?

கமல்ஹாசன்



★ இலங்கை தொழிலாளர் கட்சியின் ஸ்தாபகர் யார்?


சௌமியமூர்த்தி தொண்டமான்

★ இலங்கையில் முதன்முதலாக தேயிலை எப்போது, யாரால் பயிரிடப்பட்டது?

1824 ஆம் ஆண்டு ஜேம்ஸ் டெய்லர் என்பவரால் பேராதெனிய தாவரப் பூங்காவில் பயிரிடப்பட்டது

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# கண்டுபிடியுங்கள்



இந்தப் படத்தில் மறைந்திருப்பவர் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதி ஆவார். யார் இவர்...?

விடை: 22ஆம் பக்கத்தில் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு நடாத்தும்

ஊடக அனுசரணை: விஜய்

# இளம் எழுத்தாளர் போட்டி - 2016

மேல் மாகாண இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இலக்கியப் போட்டியொன்றை நடாத்த மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு திட்டமிட்டுள்ளது. கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிரந்தர வதிவாளர்கள் இதில் கலந்துகொள்ள முடியும். இளம் எழுத்தாளர் என்ற ரீதியில் தமது பெயரில் இதுவரை எந்தவோர் ஆக்கத்தையும் பிரசுரிக்காதவராக இருத்தல் வேண்டும்.

1. **இளம் எழுத்தாளருக்கான நாவல் போட்டி**
   (20,000 முதல் 25,000 சொற்கள் வரை)
2. **இளம் எழுத்தாளருக்கான சிறுகதைப் போட்டி**
   (750 முதல் 1,000 சொற்கள் வரை)
3. **இளம் எழுத்தாளருக்கான மரபுக் கவிதைப் போட்டி**
   (40 முதல் 60 வரையிலான வரிகள்)
4. **இளம் எழுத்தாளருக்கான புதுக்கவிதைப் போட்டி**
   (40-60 வரிகள்)
5. **இளம் பாடலாசிரியருக்கான போட்டி**
   (பாடுவதற்கு தகுந்த சொற்களின் எண்ணிக்கை)

## விபரங்களும் நிபந்தனைகளும்

01. போட்டியாளர் ஒருவர் ஒரு போட்டிக்காக ஒரேயொரு ஆக்கத்தையே சமர்ப்பிக்கலாம். எனினும், அவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.
02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் விண்ணப்பதாரி 16-25 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. சகல ஆக்கங்களும் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். வேறோர் ஆக்கத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகவோ, ஒத்த தாகவோ, தழுவலாகவோ இருக்கக்கூடாது. அத்துடன், இதற்கு முன்னர் வெளிவராத ஆக்கமாகவும் இருத்தல் வேண்டும்.
04. சகல விண்ணப்பப் படிவங்களுடனும் கிராம உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொண்ட வதிவிட சான்றிதழ்/ உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
05. சகல ஆக்கங்களும் A4 தாளில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டதாகவோ அல்லது கணினி தட்டச்சு செய்யப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும். தேவைக்கேற்ப தாள்களை இணைத்துக்கொள்ளலாம்.
06. சகல ஆக்கங்களுடனும் விண்ணப்பப் படிவம் இணைக்கப்படல் வேண்டும். போட்டியாளரை இனங்காணும் விதத்தில் எவ்வித அடையாளங்களும் ஆக்கங்களிலோ, பிரதிகளிலோ இருக்கக்கூடாது.
    (மாதிரி விண்ணப்பப் படிவம் அருகே வழங்கப்பட்டுள்ளது)
07. ஒவ்வோர் ஆக்கமும் வெவ்வேறாக அனுப்பப்படல் வேண்டும்.
08. ஆக்கங்களை அனுப்பும்போது, மூலப் பிரதியை அனுப்புவதை தவிர்க்கவும். ஏனெனில், தெரிவுசெய்யப்படாத ஆக்கங்களின் பிரதிகள் மீள் அனுப்பப்பட மாட்டா.
09. ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016 ஒக்டோபர் 31. குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கும் வகையில் கீழ் காணும் முகவரிக்கு ஆக்கங்களை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.



**முகவரி:** மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி 2016
கலை, கலாசார அமைச்சு,
4ஆம் மாடி, ரன்மகபாய, பத்தரமுல்லை.

10. மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி சம்பந்தமாக நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானமாகும்.

### மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி - 2016


01. போட்டியின் பெயர்: ....................
02. மொழி மூலம்: ....................
03. போட்டியாளரின் முழுப் பெயர்: ....................
04. புனைபெயர்: ....................
05. நிரந்தர முகவரி: ....................
06. மாவட்டம்: ....................
    பிரதேச செயலகப் பிரிவு: ....................
07. பிறந்த திகதி: ....................
    அடையாள அட்டை இலக்கம்: ....................
08. 2016.10.31இல் வயது: ....................
    வருடம்: .............. மாதம்: .............. தினங்கள்: ..............
09. பால்: ....................
10. பாடசாலை அல்லது தொழில்புரியும் இடம்: ....................
    ....................
11. தொலைபேசி இலக்கம்: ....................
    மின்னஞ்சல் முகவரி: ....................
12. இதற்கு முன் உங்கள் பெயரில் ஆக்கமேதும் வெளியாகி உள்ளதா? ....................
13. ஆக்கத்தின் பெயர்: ....................
14. ஆக்கத்தில் அடங்கியுள்ள வசனங்கள் அல்லது வரிசைகளின் எண்ணிக்கை: ....................
15. மூன்று பிரதிகளில் முன்வைத்தீர்களா? ....................
16. உங்களின் சுய ஆக்கமா? ....................
17. உங்களை இனங்காணும் ஏதேனுமோர் அடையாளம் உங்கள் ஆக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? ....................
18. மேல் மாகாணத்தில் நிரந்தரவதிவாளரான கால எல்லை: ....................
19. கிராம உத்தியோகத்தரின் வதிவிட உறுதிச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? ....................

மேற்குறித்த விபரங்கள் அனைத்தும் உண்மை எனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகிறேன். இப்போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானம் என ஏற்றுக்கொள்கிறேன்.

திகதி: 2016 .................... போட்டியாளரின் கையொப்பம் ....................

உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

noolaham.org | aavanaham.org



பூமியைக் காப்பதற்கு இயற்கை வழங்கிய ஓர் அருங்கொடையாகவே 'ஓசோன் படலம்' (ஓசோன் படை) கருதப்படுகின்றது. எனினும், மனிதனின் முறையற்ற செயற்பாடுகள் காரணமாக, ஓசோன் படலம் படிப்படியாக பாதிப்பினை எதிர்கொண்டு வருகின்றது. ஓசோன் படலம் பாதிக்கப்படும்போதுதான் அதன் மகிமை எமக்குப் புரியும். ஆகவே, ஓசோன் படலம் பற்றிய தகவல்களை அறிவோம்.



# பூமியின் பாதுகாப்புக் க
# ஓசோன் பட

## 'ஓசோன்' என்றால் என்ன?

'ஓசோன்' என்பது, மூன்று ஒட்சிசன் அணுக்கள் சேர்ந்த ஒரு மூலக்கூறு ஆகும். இது $O_3$ எனக் குறிக்கப்படுகின்றது. வளிமண்டலத்தில் 0.000007 சதவீத அளவில் ஓசோன் வாயு காணப்படுகின்றது. வருடம் முழுவதும் சூரிய ஒளி கிடைக்கக்கூடிய உஷ்ண வலயத்திலேயே, ஓசோன் வாயு அதிகளவு உற்பத்தியாகின்றது.

## ஓசோன் படலம் என்றால் என்ன?

ஓசோன் வாயுவானது, வளிமண்டலத்தில் ஒரு படலமாகவே காணப்படுகின்றது. கடல் மட்டத்தில் இருந்து 10-50 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட வலயமான படை மண்டலத்தின் கீழ்ப்பகுதியிலேயே ஓசோன் படலம் அமைந்துள்ளது. சூரியனிலிருந்து வெளிப்படுகின்ற தீங்கு விளைவிக்கக்கூடிய புறஊதாக் கதிர்களை (Ultraviolet rays) உறிஞ்சிக்கொள்ளும் ஒரு வடிகட்டியாகவே இந்த ஓசோன் படலம் செயற்படுகின்றது.

## ஓசோன் படலத்தின் தொழிற்பாடு

சூரியனிலிருந்து பல கதிர்கள் பூமியை வந்தடைகின்றன. இந்த கதிர்களில் மிக மோசமானதும் ஆபத்தை விளைவிக்கக் கூடியதுமான புறஊதாக் கதிர்களை ஓசோன் படலம் உறிஞ்சிக் கொண்டு, உயிரினங்களுக்கு ஏற்புடைய கதிர்களை மட்டும் பூமிக்குள் அனுமதிக்கின்றது. இதனால்தான் ஓசோன் படலமானது, பூமியின் பாதுகாப்புக் கவசமாகக் கருதப்படுகின்றது.

ஓசோன் படலம் பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் அவசியமாகும். அதன் தொழிற்பாடு குறைவடையும் போது, ஏற்படும் விளைவுகள் மிகவும் மோசமானவையாக இருக்கும். ஓசோன் படலம் பாதிப்படைவதனால் சூரியனின் நச்சுக் கதிர்கள் நேரடியாக பூமியை வந்தடையலாம். இதனால் அதிகளவு சுற்றாடல் பிரச்சினைகளும் ஆரோக்கிய சீர்கேடுகளும் ஏற்படலாம். ஆக, ஓசோன் படலத்தினை பாதுகாப்பதன் மூலமே இதனை தடுத்துக்கொள்ள முடியும்.

## ஓசோன் படலம் பாதிப்பு

பல பில்லியன் வருடங்களுக்கு முன்னர் பூமிக்கு மேலாக உருவாகியுள்ள ஓசோன் படலம், மிக வேகமான பாதிப்பினை எதிர்கொண்டு வருகின்றது. இதற்கு பிரதான காரணம், மனிதனின் முறையற்ற செயற்பாடுகளாகும். மனிதனால் உருவாக்கப்படும் சில ரசாயனப் பொருட்கள் ஓசோன் படலத்தின் பாதிப்புக்கு பிரதான காரணமாக உள்ளன. க்ளோரோஃப்ளோரோகாபன், ஹேலோன், மெதில் ப்ரோமைட், காபன் டெட்ராக்ளோரைட், மெதில் க்ளோரஃபோம் போன்ற வாயுக்கள் அவற்றில் சிலவாகும். இவை இயற்கையாகவோ, மனித நடவடிக்கையினாலோ வளிமண்டலத்தில் கலந்து, அதிசக்தி வாய்ந்த சூரியக் கதிர்களுடன் இணைந்து ஓசோன் படலத்தின் சமநிலையை துரிதமாக அழிக்கின்றன. இத்தகைய ரசாயன எதிர்விளைவுகள் காரணமாக, ஓசோன் படலம் மென்மையடைகின்றது. இதனையே 'ஓசோன் துளை' அல்லது 'ஓசோன் துவாரம்' அல்லது 'ஓசோன் சிதைவு' என்று அழைக்கின்றனர்.

## ஓசோன் படலத்தை பாதிக்கும் காரணிகள் சில...

**★ க்ளோரோஃப்ளோரோகாபன் (CFC)**


நறுமணம் தரும் ஸ்ப்ரேக்கள், சுவர்ப்பூச்சுகள், களைக்கொல்லிகள் போன்றவற்றின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் ஒரு பதார்த்தமாக க்ளோரோஃப்ளோரோகாபன் உள்ளது. குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டி, மோட்டார் வாகனங்கள் என்பனவற்றில் குளிரூட்டும் ஒரு வாயுவாகவும் இது காணப்படுகின்றது. தொழிற்சாலைகளில் காபன் பதார்த்தங்களை கரைக்கும் பதார்த்தமாகவும் இந்த வாயு பயன்படுத்தப்படுகின்றது.

**ஹேலோன் (Halon)**

இந்த வாயுவில் பல வகைகள் உள்ளன. தீயணைக்கும் உபகரணங்களில் இந்த வாயு பயன்படுத்தப்படுகின்றது.

**மெதில் ப்ரோமைட் ($CH_3Br$)**

இந்த வாயு விவசாய







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கவசம்:

டலம்

நிலங்களில் களைக்கொல்லியாக பயன்படுத்தப்படுகின்றது.

### காபன் டெட்ராக்ளோரைட் ($CCl_4$)


தீயணைப்புக் கருவி உற்பத்தியின் போது, காபன் பதார்த்தங்களைக் கரைப்பதற்கு பயன்படுத்தும் ஒரு பதார்த்தமாகவும் ஆடைகளில் காணப்படும் கறைகளை சுத்தம் செய்யவும் இது பயன்படுகின்றது.

### மெதில் க்ளோரஃபோம் ($C_2H_3Cl_3$)

இந்த வாயு ஆடைகள் உற்பத்தித் தொழிலிலும் சுத்தப்படுத்தலில் ஓர் அழுக்கு நீக்கியாகவும் பயன்படுத்தப்படுகின்றது.




வளிமண்டலத்தின் எல்லை







## ஓசோன் படலத்தைப் பாதுகாக்க வேண்டுமாயின்...




## ஓசோன் படல சிதைவினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள்

- ★ தோல் அரிப்பு, தோல் புற்றுநோய் ஏற்படும்.
- ★ கண்களில் வெள்ளைபூத்தல். இதனால், கண் பார்வை குறைபாடு ஏற்படும்.
- ★ மனிதரில் நோய் எதிர்ப்புச்சக்தி குன்றும்.
- ★ மன அழுத்தம் ஏற்படும்.
- ★ புறஊதாக் கதிர்கள் கடல் மற்றும் நீர்நிலைகளில் ஆழமாக ஊடுருவும் ஆற்றல் கொண்டவை என்பதனால், மீன் வளம் மற்றும் ஈரூடக வாழிகளின் இனப்பெருக்கத்தில் பாதிப்புகள் ஏற்படும்.
- ★ பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பினால் பூமியின் வெப்பநிலை அதிகரிக்கும். இதனால், கடல்நீர் மட்டம் உயர்தல் மற்றும் கடலரிப்பு ஏற்படும். துருவப்பகுதிகளில் பனிக்கட்டிகள் கரைதல், காலநிலை மாற்றம், வானிலையில் பெரும் வேறுபாடுகள் என்பன ஏற்படும்.
- ★ சுவாசத் தொகுதி சம்பந்தமான நோய்கள் ஏற்படும்.
- ★ பயிர்ச்செய்கைகள் பாதிப்படையும்.
- ★ உயிர்ப்பல்வகைமை பாதிப்படையும்.

## ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்காக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கைகள்

1976 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் முதன்முதலாக ஓசோன் படலத்தைப் பாதிக்கும் விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. 1977 இல் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் பாதுகாப்பு வேலைத் திட்டமும் உலக காலநிலை விஞ்ஞான அமைப்பும் இணைந்து ஓசோன் படலம் தொடர்பிலான குழுவொன்றை நியமித்தது.

## வியன்னா உடன்படிக்கை

1985 ஆம் ஆண்டு வியன்னா மாநாட்டின்போது, ஓசோன் படலத்தைப் பாதுகாப்பது தொடர்பில் வியன்னா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 1988 ஆம் ஆண்டு முதல் இந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது. 197 நாடுகள் இதனை அங்கீகரித்து இணக்கம் தெரிவித்துள்ளன. ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் சர்வதேச முயற்சிகளுக்கான ஒரு கட்டமைப்பாக இது செயல்படுகின்றது.

## மொன்ட்ரியல் உடன்படிக்கை

ஓசோன் படலத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும் விடயங்களைக் குறைத்தல் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையில் 1987 ஆம் ஆண்டு இணக்கப்பாட்டிற்கு வந்து, 1989 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்ட உடன்படிக்கைதான் மொன்ட்ரியல் உடன்படிக்கை ஆகும். 197 நாடுகள் இதில் கைச்சாத்திட்டுள்ளன.

- பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளியில் இருந்தவாறு தகவல் வழங்கும் செய்மதிகள்

விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதலாவது செய்மதி (செயற்கைக்கோள்) ஸ்புட்னிக்-1 என்பதாகும். இதனை சோவியத் சமவுடமைக் குடியரசு 1957 ஒக்டோபர் 4 ஆம் திகதி அனுப்பி வைத்தது. இவ்வாறு தொர்டர்பாடல் செய்மதிகளூடாக ஆரம்பமான செய்மதி ஏவுகைத் திட்டம், இன்றளவில் பல்வேறு துறைசார் செய்மதித் திட்டமாக விரிவடைந்துள்ளது.

## Astronomy satellites
## வானவியல் செய்மதிகள்



விண்வெளியில் மிதந்தபடி தகவல் வழங்கும் பாரிய தொலைநோக்கியாகவே இத்தகைய செய்மதிகள் கருதப்படுகின்றன. புவியில் உள்ள தொலைநோக்கிகளைவிட பல மடங்கு அதிகமான விண்வெளித் தகவல்களை இவற்றின்மூலம் பெற்றுக் கொள்ளலாம். உடுத்தொகுதி வரைபடம் தயாரிப்பு, கருந்துளை குறித்த ஆய்வுகள், ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களின் புகைப்படங்களைப் பெறல் போன்ற பல்வேறு பணிகள் இவ்வகை செய்மதிகளின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

## Remote Sensing satellites
## தொலையுணர் செய்மதிகள்



புவியின் சுற்றுச்சூழலை மிகத் தொலைவில் இருந்து அவதானிப்பதற்காக இத்தகைய செய்மதிகள் பயன்படுகின்றன. குறிப்பாக, இயற்கை வளம் மிக்க இடங்களை இனங்காணல், விலங்குகளின் இடம்பெயர்வு, கனியவளம் உள்ள இடங்கள், காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய பயிர்ச்செய்கைகள் போன்ற பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்வதே, இத்தகைய செய்மதிகளின் பிரதான நோக்கமாகும்.

## Communication Satellites
## தொடர்பாடல் செய்மதிகள்




உலகெங்கும் ஒளிபரப்பப்படும் செய்மதி தொலைக்காட்சி சேவைகள், நீண்ட தூர தொலைபேசி தொடர்புகள், கையடக்கத் தொலைபேசி தொடர்புகள் போன்றவை இவ்வகை தொடர்பாடல் செய்மதிகள் மூலமே சாத்தியப்படுகின்றன.

## Atmospheric Studies Satellites
## வளிமண்டல ஆய்வு செய்மதிகள்



புவியின் கீழ் சுற்றுப் பாதையில் நிலைகொண்டிருக்கும் இந்த செய்மதிகள், வளிமண்டலம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்கின்றன. புவியின் அயனி மண்டலம் மற்றும் துருவ ஒளி போன்றவற்றை அவதானிப்பதற்கு இவ்வகை செய்மதிகள் பயன்படுகின்றன.

## Navigation satellites
## திசை அறியும் செய்மதிகள்




புவியில் நாம் இருக்கும் இடத்தை துல்லியமா[க] கூறுவதற்கான தொழில்நுட்பத்திற்கு இவ்வகை செய்மதிகளே உதவுகின்றன. 1957 ஆம் ஆண்டுதான் இத்தகைய செய்மதியொன்று முதன்முதலாக புவிச் சுற்றுப்பாதைக்கு அனுப்பப்பட்டது.

## Reconnaissance satellites
## உளவு பார்க்கும் செய்மதிகள்



இவ்வகை செய்மதிகள் ஏனைய நாடுகள் குறித்து உளவு பார்ப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன், பல்வேறு நாடுகளின் ராணுவ செயற்பாடுகள் குறித்த உளவுப் பிரிவுத் தகவல்களையும் சேகரிக்கின்றன.

## Search & Rescue satellites
## தேடல் மற்றும் மீட்பு செய்மதிகள்



தரையிலோ, சமுத்திரத்திலோ உள்ள ஏதாவதொரு பொருளில் இருந்து வரும் சமிக்ஞைகளை இனங்காணும் திறன்கொண்ட செய்மதிகளே இவை. உதாரணமாக; ஏதேனுமொரு விபத்தில் சிக்கிய கப்பல் அல்லது விமானம் போன்றவற்றை இத்தகைய செய்மதிகள் மூலம் கண்டறியலாம்.

## Weather Satellites
## காலநிலை செய்மதிகள்




புவியின் காலநிலை குறித்த தகவல்களைப் பெற இந்த செய்மதிகள் புவிச் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. நாள் ஒன்றில் எந்தவொரு செக்கனிலும் உலகின் எந்தவோர் இடத்திலேனும் நிலவும் காலநிலை தகவல்களை இவற்றின்மூலம் அறிந்துகொள்ளலாம்.

## Space Exploration Satellites
## விண்வெளி அவதானிப்பு செய்மதிகள்



இத்தகைய செய்மதிகள் விண்கலமாகவும் கருதப்படுகின்றன. இவை ஞாயிற்றுத் தொகுதி குறித்த ஆழமான ரகசியங்களையும் ஆராயும் தன்மை கொண்டவை. இந்த செய்மதிகள்மூலம் விண்வெளி குறித்த மிக முக்கியமான தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன. வியாழன் கோளின் வளையத்தைக் கண்டுபிடித்ததும் இவ்வகை செய்மதியே என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆதர் சீ. க்ளார்க்
## Auther C. Clarke




உலகின் புகழ்பெற்ற விஞ்ஞான புனைகதாசிரியரான சேர் ஆதர் சீ. க்ளார்க் அவர்களே, உலகில் செய்மதி தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய முக்கிய கருத்துக்களை வெளியிட்டவராகக் கருதப்படுகிறார். 1945 இல் 'வயர்லெஸ் வேர்ல்ட்' எனும் சஞ்சிகைக்கு அவர் எழுதிய விஞ்ஞானக் கட்டுரையில், செய்மதிகளைப் பயன்படுத்தி உலகெங்கும் செயல்படும் வகையிலான வானொலி ஒலிபரப்பு குறித்து ஆலோசனை ஒன்றை முன்வைத்தார். அதனையடுத்து, உலகின் முதலாவது தொடர்பாடல் செய்மதியின் தந்தையாக இவர் போற்றப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


இலங்கையில் யானைகளின் நடமாட்டம் அதிகமுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். யானைகள்-மனிதர்கள் இடையிலான இந்த மோதலைத் தீர்ப்பதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும், சரியான தீர்வு எட்டப்படவில்லை. யானைகளின் வாழ்விடங்களான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றமையே, இந்த பிரச்சினைக்கான பிரதான காரணமாக இனங்காணப்பட்டுள்ளது.






## கென்யாவில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் 'Elephants and Bees' செயற்றிட்டம்









# மனிதன் - யானை மோதலைத் தடுக்கும் தேனீக்கள்

யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல்கள் குறித்து உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தகவல்கள் அறியக்கிடைக்கின்றன. அதற்கமைய, யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதலை முடிவுக்கு கொண்டு வரும் முகமாக அண்மையில் கென்யாவில் ஒரு செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பிரித்தானியாவின் ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம், டிஸ்னி நிறுவனத்தின் எனிமல் கிங்டம் மற்றும் சேவ் த எலிஃபன்ட்ஸ் எனும் அமைப்பு என்பன இதற்கான தொழில்நுட்ப வசதிகளை வழங்கியிருந்தன. இந்த செயற்றிட்டம் 'Elephants and Bees Project' என அழைக்கப்படுகின்றது.

கென்யாவில் வசிக்கும் தேனீக்களைப் பயன்படுத்தியே இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. காரணம், இயல்பாகவே யானைகள் தேனீக்களை கண்டு அஞ்சும் தன்மை கொண்டவை. தேனீக்கள் எழுப்பும் ஒலியை யானைகள் விரும்புவதில்லை. இதனால், தேனீக்கள் உள்ள இடங்களுக்கு யானைகள் வருவதில்லை. எனவேதான், விவசாய நிலங்களுக்கு அருகாமையில் தேனீக்களை வளர்ப்பதன்மூலம் யானைகள் அப்பிரதேசத்திற்குள் பிரவேசிப்பதனைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்று தீர்மானிக்கப்பட்டு இந்த செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இதன்மூலம் யானைகள் மற்றும் மனிதர்களின் உயிர்களைக் காப்பாற்ற முடிந்துள்ளதாக இந்த செயற்றிட்டத்தின் பிரதானியான கலாநிதி லூசி ஈ. கிங் குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கும்போது; "நாம் விவசாய நிலங்களை சூழ வேலிகளை அமைத்து, வேலிகளின் குறித்த சில இடங்களில் தேனீக்கள் வளர்ப்புக் கூடுகளை அமைத்தோம். இந்த வேலிகளுக்கு அருகில் வரும் யானைகள், தேனீக்களின் ஒலி கேட்டு அவ்விடத்திலிருந்து துரித கதியில் அகன்று விடுகின்றன" என்றார்.

இந்த செயற்றிட்டம் மிகவும் ஆழமாக ஆராயப்பட்டு மேற்கொள்ளப்பட்டதாகவும், யானைகள் இயற்கையாகவே தேனீக்கள் மீது கொண்டுள்ள அச்ச உணர்வையே தாம் சிறந்த உபாயமாக இங்கு கையாண்டுள்ளதாகவும், இதன்மூலம் விவசாய நிலங்கள் சேதமாக்கப்படுவது தவிர்க்கப்படுவதுடன், தேனீ வளர்ப்புமூலம் மேலதிக வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள முடியும் என இந்த புதிய செயற்றிட்டம் குறித்து சேவ் த எலிஃபன்ட்ஸ் அமைப்பு, அதன் இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

- இ



noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

පුතා: අම්මේ! මගේ මේ දත කකියනවා.
அம்மே! மகே மே தத ககியனவா.
மகன்: **அம்மா! என்னுடைய இந்தப் பல் வலிக்கிறது.**

අම්මා: කෝ බලන්න.. කොයි දත ද?
கோ பலன்ன... கொய் தத த?
அம்மா: **எங்கே பார்ப்போம்... எந்தப் பல்?**

පුතා: උඩ මේ පැත්තේ දත.
உட மே பெத்தே தத.
மகன்: **மேலே இந்தப் பக்கத்திலுள்ள பல்.**

අම්මා: ආ.. ඒ දත නරක්වෙලා.
ஆ... ஏ தத நரக்வெலா.
அம்மா: **ஆ... அந்தப் பல் சூத்தையாயுள்ளது.**

පුතා: දැන් මොකද කරන්නේ අම්මේ?
தென் மொகத கரன்னே அம்மே?
மகன்: **இப்போது என்ன செய்வது அம்மா?**

අම්මා: අපි දත් දොස්තරට පෙන්වමු.
அப்பி தத் தொஸ்தரட்ட பென்வமு.
அம்மா: **நாம் பல் வைத்தியரிடம் காட்டுவோம்.**

පුතා: එයා දත ගලවයි ද?
எயா தத கலவய் த?
மகன்: **அவர் பல்லைப் பிடுங்குவாரா?**

අම්මා: දොස්තර බලල කියයි. සමහර විට පුරවයි.
தொஸ்தர பலல கியய். சமஹர விட்ட புரவய்.
அம்மா: **வைத்தியர் பார்த்துவிட்டுச் சொல்வார். சிலவேளை நிரப்புவார்.**

පුතා: අම්මේ, දත් ගලවන කොට රිදෙනවා ද?
அம்மே, தத் களவன கொட்ட ரிதெனவா த?
மகன்: **அம்மா, பல் பிடுங்கும்போது வலிக்குமா?**

අම්මා: රිදෙන්නේ නැහැ පුතා.
ரிதென்னே நெஹெ புதா.
அம்மா: **வலிக்காது மகன்.**

: දැනට මේ පැනඩෝල් දෙක බොන්න. අපි හවසට දොස්තර ළඟට යමු.
தெனட்ட மே பெனடோல் தெக பொன்ன. அப்பி ஹவஸட்ட தொஸ்தர லங்கட்ட யமு.
: **இப்போதைக்கு இந்த இரண்டு பெனடோல் களைக் குடியுங்கள். பின்னேரம் வைத்தியரிடம் போவோம்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. பல் வலிக்கிறது.
   ..................................................
2. வைத்தியரிடம் காட்டுவோம்.
   ..................................................
3. பின்னேரம் போவோம்.
   ..................................................




## தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
## Direct speech & Indirect speech

நிகழ்கால வினைமுற்றுத் தொடர் வாக்கியம் (Present perfect continuous tense) ஒன்றை தன் கூற்று நிலையில் இருந்து, பிறர் கூற்று நிலை வாக்கியமாக மாற்றியமைக்கும்போது, அவ்வாக்கியம் பின்வருமாறு இறந்தகால வினைமுற்றுத் தொடர் வாக்கியமாக (Past perfect continuous tense) அமைகின்றது.

அ) The teacher said, "I have been teaching English since 2010".
ஆசிரியர் கூறினார், "நான் 2010 ஆம் ஆண்டில் இருந்து ஆங்கிலம் கற்பித்து வருகின்றேன்". என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஆ) The teacher said that he had been teaching English since 2010.
தான் 2010 ஆம் ஆண்டில் இருந்து ஆங்கிலம் கற்பித்து வருவதாக ஆசிரியர் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு:** மேற்படி (அ) தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, 'have been teaching' எனும் நிகழ்கால வினைமுற்றுத் தொடர் வாக்கியம், பிறர் கூற்று வாக்கியத்தில் 'had been teaching' எனும் இறந்தகால வினைமுற்றுத் தொடர் வாக்கியமாக மாற்றப்பட்டுள்ளதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

★ ஏனைய உதாரணங்களையும் இங்கே பார்ப்போம்.

இ) Kumar said, "I have been working there for about 5 years.
குமார் கூறினான், "நான் ஏறத்தாழ ஐந்து வருடங்களாக அங்கே வேலை செய்து வருகின்றேன்". என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஈ) Kumar said that he had been working there for about 5 years.
தான் ஏறத்தாழ ஐந்து வருடங்களாக அங்கே வேலை செய்து வருவதாகக் குமார் கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★—★—★—★

உ) Sumathi said, "I have been doing my home work since morning".
சுமதி கூறினாள், "நான் காலையில் இருந்து எனது வீட்டு வேலைகளைச் செய்து வருகின்றேன்". என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஊ) Sumathi said that she had been doing her home work since morning.
தான் காலையில் இருந்து தனது வீட்டு வேலைகளைச் செய்து வருவதாக சுமதி கூறினாள்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★—★—★—★

எ) They said, "we have been living in India for a long time".
அவர்கள் கூறினர், "நாங்கள் நீண்ட காலமாக இந்தியாவில் வசித்து வருகின்றோம்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஏ) They said that they had been living in India for a long time.
தாங்கள் நீண்டகாலமாக இந்தியாவில் வசித்து வருவதாக அவர்கள் கூறினர்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு டெஸ்ட் தண்டாயுதம் வழங்கப்பட்டது

உலகின் முதன்மை நிலை டெஸ்ட் அணி என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ள பாகிஸ்தான் அணிக்கு உரித்தான சர்வதேச கிரிக்கெட் சபையின் 'டெஸ்ட் தண்டாயுதம்' சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி டேவிட் ரிச்சர்ட்சனினால் பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக்கிடம் வழங்கப் பட்டது.




இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டியை 2-2 என சமப்படுத்தியதன் மூலமே பாகிஸ்தான் அணி டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் முதலிடத்தை பெற முடிந்தமை குறிப் பிடத்தக்கது. இதன்படி டெஸ்ட் தரப்பட்டியலில் முதலிடத்தைப் பெற்ற ஐந்தாவது நாடு என்ற பெருமையையும் பாகிஸ்தான் பெறுகின்றது. இதற்கு முன்னர் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் முதலிடத்தைப் பெற்றிருந்தன.

# சீருடையுடன் பாடசாலை சென்ற ஜயசூரிய



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரிய அண்மையில் தான் கல்வி கற்ற மாத்தறை புனித சர்வேஸஸ் வித்தியாலயத்திற்கு பாடசாலை சீருடையுடன் வருகை தந்த காட்சி பெரிதும் கவனத்தை ஈர்த்த ஒன்றாக அமைந்தது.

'மீண்டும் பாடசாலை செல்வோம்' என்ற தொனிப் பொருளில் பழைய மாணவர் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்விலேயே ஜெயசூரிய இவ்வாறு பாடசாலை சீருடையுடன் வருகை தந்திருந்தார். அவருடன் அவரது சமகால பாடசாலை நண்பர்களும் இவ்வாறே சீருடையுடன் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இது தனக்கு மறக்க முடியாத ஓர் அனுபவத்தைத் தந்ததாக ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

விஜய் ஸ்போர்ட்ஸ்

# மெஸி உபாதையில்



உலகப் புகழ் கால்பந்தாட்ட வீரர் லயனல் மெஸ்ஸி கால் உபாதைக்கு உள்ளாகியுள்ளார். எடேல்ட்கோ மெட்ரிட் அணிக்கும் பார்ஸிலோனா அணிக்குமிடையே நடைபெற்ற போட்டியொன் றின்போதே, மெஸ்ஸி இவ்வாறு உபாதைக்கு உள்ளானார். இதன் காரண மாக, மூன்று வாரங்களுக்கு ஓய்வெடுக்குமாறு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதனால், 2018 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி களையொட்டிய தகுதி காண் போட்டியொன் றில் கலந்துகொள்ளும் வாய்ப்பையும் மெஸி இழக்கின்றார்.

# இங்கிலாந்து வீரர்களின் நிதியுதவி



இருதய நோயாளி களுக்காக பிரிட்டனில் ஏற்படுத்தப்பட் டுள்ள நிதியத்தினால் நடத்தப்படுகின்ற நிதி சேகரிப்பு வேலைத் திட்டத்தின் ஊடாக, இங்கிலாந்தின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜேம்ஸ் டேலரின் சத்திர சிகிச்சைக்கு உதவுவதற்காக பல இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் நிதியுதவி புரிய முன்வந்துள்ளனர். இதனால் 25,000 மில்லியன் ஸ்டேர்லிங் பவுன் வசூலாகியுள்ளது.

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் எலிஸ்டெயார் குக், ஜோஸி ரூட், ஓயின் மோகன், பென் ஸ்டொக்ஸ், ஜேசன் ரோயி, ஸ்டுவர்ட் புரோட் ஆகியோரே இவ்வாறு நிதியுதவி புரிந்துள்ளனர்.

# சந்திமாலுக்கு ஒருமாத ஓய்வு




இலங்கை கிரிக்கெட் அணியின் உப தலைவர் தினேஷ் சந்திமால் ஒரு மாத ஓய்வில் இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். உள்ளூர் போட்டியொன்றில் பந்து தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது, பந்தானது, சந்திமாலின் வலதுகை பெருவிரலில் மோதி விரல் பாதிப்பிற்கு உள்ளாகியது.

இதனையடுத்து அந்த பெருவிரலில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எனவே, அவர் பூரண குணமடையும்வரை ஒரு மாத காலத்திற்கு ஓய்வில் இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளார். ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி இலங்கை அணி சிம்பாப்வே செல்லவுள்ள அதேவேளை, இப்போட்டியில் சந்திமால் கலந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திரித்துவ தேவாலயம்



உலகப் புகழ்பெற்ற திரித்துவ தேவாலயம் கண்டி நகரில் அமைந்துள்ளது. புராதன இலங்கையின் கட்டடக் கலை பாணியில் இந்த தேவாலயத்தை அமைத்துள்ளனர்.






அநுராதபுரம், பொலன்னறுவை யுகத்தின் புராதன கட்டடச் சிதைவுகள் மற்றும் அக்கால கட்டக் கலைகளை திரித்துவ தேவாலய கட்டட அமைப்பிலும் உருவாக்கியுள்ளமையே இதன் சிறப்பம்சமாகும்.

தேவாலயம் கட்டுவதற்கான தூண்களை அமைப்பதற்குரிய கற்பாறைகள் கண்டி நகரிற்கு அருகில் உள்ள அருப்பொலையிலிருந்தும் தேவையான மரங்கள் மாவனல்லை மற்றும் கெக்கிராவையிலிருந்தும் கொண்டுவரப்பட்டன. கட்டடப் பணிக்கான இரும்பு வோக்கர் நிறுவனத்தில் இருந்து பெறப்பட்டது.

திறமையான இலங்கை கற்சிற்பிகளால் இங்குள்ள தூண்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அக்கற்தூண்களில் நுணுக்கமான அழகிய செதுக்கல் வேலைப்பாடுகள் தென் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட 'பெரியசாமி' என்பவரின் தலைமையிலான சிற்பிகள் குழு மேற்கொண்டதாகும். திரித்துவ தேவாலயத்தில் கலை ஆர்வலர்களால், புகழ்ந்து பேசப்படும் மற்றொரு விடயம்தான் டேவிட் பேண்டர் அவர்களால் தீட்டப்பட்ட ஓவியங்களாகும். இந்த ஓவியங்கள் கிறிஸ்தவ சமயத்தை தொனிப் பொருளாகவும் இலங்கைக் கலைப் பாணியை பின்புலமாகவும் கொண்டு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

(-அ)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி: 208




### மேலிருந்து கீழ்

01. கண்ணுக்கு மேலுள்ள மயிர் வளைவு.
02. நாள்.
03. துண்டு. (குழம்பியுள்ளது)
05. உமிழ்நீர். (குழம்பியுள்ளது)
06. துரியோதனனின் மாமன்.
07. பயனில்லாதவன். (தலைகீழ்)
09. வித்திலிருந்து புதிதாக வெளிவரும் பாகம். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. பெருங்காற்று.
03. தோத்திரம். (மாறியுள்ளது)
04. அடையாளம்.
05. சிந்தனை. (குழம்பியுள்ளது)
07. துர்நாற்றம்.
08. அன்பு.
09. 'கிரீடம்' என்றும் அர்த்தப்படுத்தலாம்.

### குறுக்கெழுத்துப் போட்டி: 207 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1அ | டை | ம | ழை | | 2பே |
| ட | 3கு | ம் | 4பி | | ச் |
| வி | | ல் | | லை | 5சா |
| | | 6வி | க் | 7கு | ள |
| தி | 8ஆ | | 9பா | | ன் |
| 10பி | டை | | 11கி | ரி | |




### படங்களுக்குரிய முதலெழுத்துடன் இணைக்க


__ar • • d


__og • • c


__ag • • l


__amp • • b

### எதிர்ப்பதம் தருக





### அறிவுக்கு விருந்து (21.09.2016) விடைகள்









| | |
|---|---|
| 3 -2 | 1 |
| 10 -5 | 5 |
| 8 -2 | 6 |
| 4 -3 | 1 |
| 9 -6 | 3 |

### அருகிலுள்ள சொற்களை எழுத்துக் கூட்டத்தினுள் இனங்கண்டு நிறந்தீட்டுக






| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| g | r | a | p | e | s | p | t | b | y |
| i | i | s | q | i | a | n | e | c | d |
| l | n | s | q | c | u | e | g | h | r |
| c | a | j | f | a | s | n | g | e | i |
| o | p | u | c | k | a | g | s | e | n |
| o | k | i | m | e | g | q | j | s | k |
| k | i | c | g | v | e | g | d | e | s |
| i | n | e | b | a | s | k | e | t | p |
| e | s | b | l | a | n | k | e | t | u |
| s | a | n | d | w | i | c | h | e | s |




basket blanket cake
cheese cookies drinks
eggs grapes juice
napkins sandwiches sausages

### இடைவெளிகளை நிரப்புக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சி.சஞ்சய்,
மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்,
முல்லைத்தீவு.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



உ.ஷயோன்
தமிழ் மத்திய மகா வித்தியாலயம்,
வவுனியா.



எம்.தர்மிஷா,
புனித பத்திரிசியார் கல்லூரி, தலவாக்கலை.



ஆர்.ரிசா அஹமட்,
லிட்டில் பிளவர் பாலர் பாடசாலை,
வெளிமடை.




கே.இமானுவேல்,
விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி,
நீர்கொழும்பு.



ஐ.ரிஷிவர்மன்,
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.



ஜஸ்டின் கிஷாந்தன்,
க/இந்து தேசிய கல்லூரி, புசல்லாவை.



அ.கவிஸான்,
றோயல் கல்லூரி, லிந்துலை.



சிமால் ஸவ்பர்,
மாறை மின்ஹாத் தேசிய பாடசாலை,
திக்குவல்லை.

# கல்முனை மஹ்மூத் கல்லூரி அதிபர் பஷீர் அவர்களுக்கான சேவை பாராட்டு விழா

அதிபர்மணி விருது பெற்ற ஜனாப் ஏ.எச்.ஏ. பஷீர் அவர்கள் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு ஆசிரியராக, அதிபராக 30 வருடங்களாக ஆற்றிய மாபெரும் சேவையைக் கௌரவிக்கும் முகமாக எதிர்வரும் 09 ஆம் திகதி கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.

1975 மார்ச் மாதம் 1 ஆம் திகதி கணித பாடத்தில் விசேட பயிற்சி பெற்ற ஜனாப் ஏ.எச்.ஏ.பஷீர் அவர்கள் கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு ஆற்றிய ஆரம்ப சேவையானது மாணவிகளின் கல்விக்கு ஒரு பேருபகாரமாக இருந்தது.



அரசியல் தலைவர்கள், உயர் அதிகாரிகள் அனைவரினதும் பூரண ஆதரவைப் பெற்று கல்லூரியின் பௌதீக வளத்தினை அதிகரித்தார். அவற்றுள் பலமாடிக் கட்டடங்கள், உயிரியல் இரசாயன பௌதீக விஞ்ஞான கூடங்கள், மனையியல் கூடம், மாணவியர் விடுதி விஸ்தரிப்பு, நுழைவாயில், அலங்கார அமைப்பு, கல்முனை மாவட்டத்திலேயே முதலாவது நிர்வாகக் கட்டடம், பள்ளிவாயிலும் கலாசார நிலையமும், திறப்பு விழாவுக்கு ஆயத்தமாக இருக்கும் மேலும் இரண்டு மாடிக் கட்டடங்கள், விளையாட்டு மைதானப் புனரமைப்பு என்பன அதிபர் பஷீரின் பெயர் கூறும் வரலாற்று நிர்மாணங்கள் ஆகும்.

அவை தவிர, கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் மாணவிகள் க.பொ.த சாதாரண, உயர்தரங்களில் தொடர்ச்சியாக சிறந்த பெறுபேறுகளை பெற்று வருவதிலும் கோட்ட பிராந்திய மாவட்ட மாகாண மட்டங்களில் நடக்கும் விளையாட்டுப் போட்டி, தமிழ் தினப் போட்டி, ஆங்கில மொழிதினப் போட்டி என்பவற்றில் பங்குபற்றி பல சாதனைகள் நிலைநாட்டுவதிலும் வெளிப்பட்டு நிற்கின்றது.

பிரித்தானிய அரசினால் இலங்கையிலுள்ள முன்னணிப் பாடசாலைகளின் கல்வித் தரம் மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி தேர்ந்தெடுக்கப்பட்டு 2006-2009 ஆம் ஆண்டுக்கான சர்வதேச விருது வழங்கப்பட்டதும் கிழக்கிலங்கையில் இக்கல்லூரி மாத்திரமே இவ்விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்டதும் அதிபர் பஷீர் அவர்களின் பன்முகத்தன்மையான நிர்வாகத் திறமை காரணமாகவேயாகும்.

இக்கல்லூரியில் கல்விகற்ற நூற்றுக் கணக்கானோர் இலங்கையில் நாலாபக்கமும் பல துறைகளிலும் சேவையாற்றி வருவது முஸ்லிம் மகளிர் கல்வியியல் தொடர்பில் அதிபர் பஷீரின் திடமான ஒரு சமுதாயச் சாட்சியம் ஆகும். இதுவே, அவரது நிர்வாக ஆளுமையையும் கல்வியியல் பங்களிப்பையும் எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

(தகவல்: நளீம் லதீப்)

'விஜய்' பத்திரிகையின் ஊடக அனுசரணையுடன் துர்க்கா பெலஸ் வர்த்தக நிலையத்தினர் நடாத்திய போட்டியில் பங்குபற்றி சைக்கிள் ஒன்றை வென்ற திகோ/அன்னை சாரதா கலவன் பாடசாலை மாணவனான கோ.யுவன்ராஜ், பாடசாலையின் அதிபர் பெ.தணிகாசலத்திடமிருந்து பரிசினைப் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாகனப் புகை மூளையைப் பாதிக்கும்





## புதிய ஆய்வு

அன்றாடம் நகரங்களில் பயணிக்கும் எண்ணற்ற வாகனங்களில் இருந்து வெளியிடப்படும் புகையை சுவாசிப்பதால், நம்முடைய மூளை பாரிய பாதிப்புக்குள்ளாவதுடன் 'அல்சைமர்' எனும் நோயும் ஏற்படும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

> ''ஒரு கிராம் மூளை திசுவில் பல மில்லியன் கணக்கிலான மேக்னடைட் படிவதால் மூளைச் செல்களுக்கும் மூளைக்கும் பாரிய சேதம் ஏற்படும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்''



கண்களுக்குப் புலப்படாத சின்னஞ்சிறிய இரும்புத் துகளுக்கு 'மேக்னடைட்' என விஞ்ஞானிகள் பெயர் வைத்துள்ளனர். ஒரு கிராம் மூளை திசுவில் பல மில்லியன் கணக்கிலான மேக்னடைட் படிவதால் மூளைச் செல்களுக்கும் மூளைக்கும் பாரிய சேதம் ஏற்படும் எனவும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். நாம் சுவாசிக்கும்போது, உள்வாங்கப்படும் வாகனப் புகையிலுள்ள பெரிய துகள்களான 'மாசின்' நுரையீரலில் படிந்து குருதியுடன் கலக்கின்றது. இதனால், இந்த துகள்கள் குருதியுடன் ஏனைய உடற் பாகங்களுக்கு சென்றடைகின்றது. அதேவேளை, மேக்னடைட் எனப்படும் நுண்ணிய துகள்கள் மூக்கின் வழியே மேலெழுந்து மூளைக்கு சென்றடைவதால் மூளைச் செல்களுக்கும் நரம்பிற்கும் இடையிலான தொடர்பாடலை தடுக்கும் 'மாசு' மூளைக்குள் வளர இந்த மேக்னடைட் துகள்கள் தூண்டுகோலாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### இதனை கட்டுப்படுத்துவதற்கான வழிகள்

இரும்புத் துகள்களால் ஏற்படும் தாக்கத்திற்கு நிரந்தரத் தீர்வு இல்லாத போதும் தற்காலிகமாகவும் நோய்களின் தாக்கத்தை கட்டுப்படுத்தவும் மேற்கத்தேய நாடுகளில் பாவிப்பது போன்று 'மாஸ்க்'குகளை பாவிப்பது நன்மை விளைவிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ **Practical English Learning Software DVD**



★ **4000 English Letter Writing Software**





★ **8 GB Pen Drive**



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

*21.09.2016* 'தூவானம்' கேள்விக்கான விடை:
சோரா
**Pendrive** வெற்றியாளர்:
ஜீ.பர்ணிதா,
பிரதான வீதி,
கிரான்.

**'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை**

Write Message
**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

Pen Drive போட்டி
(05.10.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**
**05.10.2016**
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அளவுக்கு அதிகமானால் நீரும் ஆபத்தாகும்

மனிதனின் நாள்தோறும் ஏற்படும் வளர்ச்சிதை மாற்றம், பளபளப்பான சருமம் மற்றும் உடலுக்குத் தேவையான ஆற்றல் போன்றவற்றுக்கு நீர் அருந்துவது அவசிய மாகும். ஆனால், அதே நீரை அதிகளவில் அருந்தும்போது அது ஆபத்தை ஏற்படுத்து கின்றது என ஆய்வாளர் கள் கண்டுபிடித்துள்ளார் கள்.

ஒருவரின் நீர் அருந்தும் அளவை, அவரின் எடை, அவர் மேற்கொள்ளும் வேலையைப் பொறுத்து தீர்மானிக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன்படி 80 கிலோ எடை கொண்ட ஒருவர், அவரின் எடையில் பாதி அளவான 40 அவுன்ஸ், அதாவது சுமார் $1\frac{1}{4}$ லீற்றர் நீரை குடிக்க லாம். அத்தோடு, அவரின் வேலையைப் பொறுத்து குடிக்கும் நீரின் அளவை மாற்றிக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, குளிர் அறையில், கணினியில் வேலை செய்பவராக இருந்தால் குறைந்தளவும், கடினமான வேலை, உடற்பயிற்சி மேற்கொள்ப வராயின் 1/2 லீற்றர் அதிகமாக நீர் அருந்த வேண்டும். இதன்போது உங்களால் சரியான அளவை பின்பற்ற முடிய வில்லை என்றால், பின்வரும் வழிமுறைகளை கடைப்பிடித்தாலே தேவை யான நீரைப் பருக முடியும்.



* காலை எழுந்தவுடன் 1 டம்ளர் நீர் அருந்த வேண்டும்.
* உணவு எடுப்பதற்கு அரைமணி நேரத்துக்கு முன்னர் 2 டம்ளர் தண்ணீர் அருந்த வேண்டும்.
* நித்திரைக்கு செல்வதற்கு 2 மணி நேரத்துக்கு முன்னர் 1 டம்ளர் தண்ணீர் அருந்த வேண்டும்.
* வெளியில் செல்லும்போது தண்ணீர் போத்தல் ஒன்றை எடுத்துச் செல்லுங்கள்.



### இவர்தான் அவர்...



கண்டுபிடியுங்கள்

விடை:

ஜே. ஆர். ஜயவர்த்தன

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதி ஆவார்.

# பார்படோஸ்

மத்திய அமெரிக்க வலயத்தில் கரீபியன் கடல் வரைய றைக்குள் அமைந்துள்ள பார்ட்டோஸ் ஒரு தீவு நாடாகும். இத்தீவிற்கு 15 ஆம் நூற்றாண்டளவில் ஸ்பெயின் யாத்திரிகர்கள் வந்தனர். அதனைத் தொடர்ந்து இந்நாட் டினை பிரித்தானியர் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தனர். இன்றும் பிரித்தானியாவின் முடியின் கீழுள்ள இந்நாடு பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



கரீப் மற்றும் அரவாக் கோத்திரத்தார் ஆகியோரே ஆரம்பக் குடிகளாவர்.



கி.பி.1625 ஆம் ஆண்டளவில் பிரித்தானியர் இந்நாட்டு மக்களை அடிமைகளாகப் பயன்படுத்தினர்.

### தேசிய மீனும் பறவையும்

தேசிய மீன் - பறக்கும் மீன்கள்

தேசிய பறவை - பெலிகன்



பிரித்தானியாவின் நிர்வாக ஆளுனராக எலியட் பெல்க்ரேவ் செயல்படுகிறார்.

### அரசியல்


பார்படோஸின் நாடாளுமன்றம்



பிரதமர் ஃப்ருஎன்டல் ஸ்டுவர்ட்



### இனங்கள்




### மொழி

ஆங்கிலம் (உத்தியோகபூர்வ மொழி) பஜான்

### சமயம்

புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 66.3%,
உரோமன் கத்தோலிக்கர் 3.8%,
ஏனைய கிறிஸ்தவர்கள் 5.4%,
ஏனையோர் 2.5%, குறிப்பிடாதோர் 20.6%

### இயற்கை வளம்

பெற்றோலியம், இயற்கை வாயு



தேசிய கொடி




மொத்த நிலப்பரப்பு ச.கி.மீற்றர்

**439 $km^2$**

மொத்த சனத்தொகை

**277,821**



மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நடை பெறுகின்றது.



மீள் பிறப்பாக்கி மின்வலுவாக சூரிய சக்தி உபயோகப்படுகின்றது.



கரும்புக் கைத்தொழில் நடைபெறுகிறது.



கல்விநிலை உயர்ந்த மட்டத்தில் உள்ளது.



சுற்றுலாத் துறை இடங்கள்



மருந்து தயாரிப்பிற்கு புகழ்பெற்ற நாடு.



கத்தோலிக்க தேவாலயம்.



பளிங்குப்பாறை, சுண்ணக்கல் என்பனவற்றால் உருவான நாடு.





### தலைநகரமும் பெரிய நகரமும்





நாணயம் - பார்பேடியன் டொலர்.

பாரம்பரிய உடை.



பாரம்பரிய நடனம்.



பயிர்ச்செய்கையோடு தானியங்களும்



மீன்பிடிக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உலகில் புகழ்பெற்ற வாள்கள்





வாள் சண்டை என்பது நமக்குள் ஆர்வத்தைத் தூண்டும் ஒரு விடயமாகும். அதனால் இன்று நாம் உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற வாள்களின் விபரங்கள் பற்றி ஆராய்வோம்.

உலகில் முதன்முதலில் செம்பு வாள்களே உருவாக்கப்பட்டன. இத்தகைய வாள்கள் பாகிஸ்தானில் உள்ள சிந்து சமவெளி நாகரிக நகரமான ஹரப்பாவிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னர் பெரும்பாலும் இரும்பினால்தான் வாள்கள் உருவாக்கப்பட்டன.

## டோமோயோகி யாமஷிட்டா வாள்



இரண்டாம் உலகப்போரில் ஜப்பானின் வசமிருந்த பிலிப்பைன்ஸ் தீவுகளில், இம்பீரியல் ராணுவத் தளபதியாக பலரது வாழ்வை சிதைத்த வீரர்தான் யாமஷிட்டா (1885-1944). ஆனால், ஜப்பான் கைப்பற்றி வைத்திருந்த மலேசியா, சிங்கப்பூர் என இரு நாடுகளையும் போரில் ஜப்பான் இழந்ததும் நிலைமை மாறியது.

மணிலா படுகொலை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயற்பாடுகளில் யாமஷிட்டா ஈடுபட்டதாகக் கூறி அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவரது பெயரில் "யாமஷிட்டா ஸ்டேண்டர்ட்' எனும் போர் குற்றங்களுக்கான சட்டமும் இயற்றப்பட்டிருந்தது. அவருக்காவே ஃப்யூஜிவாரா கானேனாகா எனும் புகழ்பெற்ற வாள் தயாரிப்பாளரால் உருவாக்கப்பட்ட வாள் தான் இது.



## ஏழு கிளை வாள்

கி.பி 4ஆம் நூற்றாண்டில் உருவான இந்த வாள், தற்போது ஜப்பானில் உள்ள 'டென்ரி' எனும் இடத்தில் உள்ள காட்சி யகத்தில் வைக்கப்பட்டுள்ளது. 74.9 செ.மீற்றர் நீளமுள்ள இந்த வாளின் மத்தியில் உள்ள வாசகத்தில் தங்கமுலாம் பூசப்பட்டுள்ளது.

## சான் மார்ட்டின் வளைவு வாள்



தென் அமெரிக்க விடுதலைக்காக ஸ்பெயினை எதிர்த்துப் போராடிய விடுதலை வீரர் ஜோஸ் டி சான் மார்ட்டின் (1778- 1850) பயன்படுத்திய வாள்தான் இது. தென் அமெரிக்காவின் நாயகனாக மட்டுமல்லாது பெரு நாட்டின் காவலராகவும் இவர் திகழ்ந்தார். இந்த வாளை தன் இறப்பு வரை மார்ட்டின் தன்னுடன் வைத்திருந்தார். தற்போது அர்ஜென்டினா நாட்டின் தலைநகரான பியூனஸ் அயர்ஸில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் இந்த வாள் வைக்கப்பட்டுள்ளது.



## வில்லியம் வாலஸின் வாள்

1270 - 1305 ஆம் காலகட்டத்தில் இங்கிலாந்தை எதிர்த்து ஸ்கொட்லாந்தின் சுதந்திரத்திற்காக போராடியவர் வில்லியம் வாலஸ். இவரின் தலைமையிலான வீரர்கள் பலரும் நேருக்கு நேர் கத்திச் சண்டை செய்வதில் வல்லவர்கள். தங்களின் வாளில், தாங்கள் பெற்ற வெற்றிகளைக் குறித்தும் வைத்திருந்தனர்.

இங்கிலாந்து மன்னர் எட்வர்டிடம் வசமாக சிக்கிய வில்லியம் வாலஸ்மீது உடனே தேசத் துரோகச் குற்றம் சுமத்தப்பட்டு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. அத்தண்டனையை வாலஸ் அஞ்சாது துணிந்து ஏற்றார். அவரின் மறைவின் பின்னர் வாள் மட்டுமல்ல, அவரின் வீரமும் ஸ்கொட்லாந்து நாடு முழுவதும் புகழ்பெற்றது. இந்த வாள் 163 செ.மீ உயரமும் 2.7 கிலோ எடையும் கொண்டதாகும். இந்த வாள் ஸ்கொட்லாந்தின் ஸ்டர்லிங் எனுமிடத்தில் அமைந்துள்ள வாலஸ் நினைவகத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.




## டிஸோனா வாள்




கி.பி. 11ஆம் நூற்றாண்டில் விவாரில் எனும் நகரில் பிறந்த எல் சிட், என்பவர் மாவீரராகவும், கல்வியாளராகவும் திகழ்ந்தார். அவரது வாள்தான் டிஸோனா எனப்படும் இந்த வாள் ஆகும். இது 103 செ.மீற்றர் உயரமும், 1.1 கிலோ எடையும் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டங்களின் நகர்வு







உலகில் எத்தனை கண்டங்கள் உள்ளன? என்று கேட்டால் 'ஏழு கண்டங்கள்' என்று பதிலளிப்பீர்கள். ஆனால், சுமார் 225 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் பூமியில் ஒரு கண்டம்தான் இருந்ததாம். அந்த கண்டம் 'பென்ஜியா' என்றும், சுற்றியிருந்த ஒரே சமுத்திரம் 'பந்தலாஸ்ஸா' என்றும் அழைக்கப்பட்டுள்ளன. பின்னர் உலகில் நிகழ்ந்த பல்வேறு மாறுபாடுகள் காரணமாக, இந்த மாபெரும் நிலப்பரப்பு காலத்திற்குக் காலம் பல்வேறு பகுதிகளாக பிளவுபட்டு நகரத் தொடங்கியுள்ளது. அதன்படியே, இன்று ஏழு கண்டங்களும் ஐந்து சமுத்திரங்களும் உருவாகியுள்ளன. பூமியிலுள்ள கண்டங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடன் நகர்ந்து செல்வது 'கண்டப்பெயர்ச்சி' எனப்படுகின்றது.

# பிறந்தநாள் பாடலின் பிறந்தநாள்



உங்கள் பிறந்தநாளில் அல்லது பிறரது பிறந்தநாளில் பாடப்படும் 'happy birthday to you.. happy birthday to you..' என்று ஆரம்பமாகும் பிறந்தநாள் வாழ்த்துப் பாடல் எப்போது பிறந்தது என்று தெரியுமா?

1893 ஆம் ஆண்டு அமெரிக்காவில்தான் இந்த பாடல் முதன்முதலில் அறிமுகமாகியுள்ளது. பெட்டி ஹில் மற்றும் அவரது சகோதரியான மில்ட்ரட் ஹில் என்பவரும் இணைந்தே இந்த பாடலை எழுதியுள்ளனர். இன்று வரை உலகில் அதிகமாக பாடப்பட்டுள்ள பாடலும் இதுதான். இந்த பிறந்தநாள் வாழ்த்துப் பாடல் கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளது.




# புல்லாங்குழலா? பறவைக் கூடா?



மரங்கொத்திப் பறவைகள் தமது அலகால் மரங்களைக் கொத்தியே அவற்றின் கூடுகளை அமைத்துக்கொள்கின்றன. அவ்வாறு கொத்தும் போது மரப்பட்டைகளுக்குள் இருந்து தமக்குத் தேவையான உணவுகளையும் பெற்றுக்கொள்கின்றன. இப்பறவைகளில் சில, தமக்கான இரையைப் பெற்றுக்கொள்வதற்காக உயரமான மரங்களில் மூன்று அல்லது நான்கு இடங்களில் கொத்தி துளைகளை அமைப்பதுண்டு. ஒன்றன்கீழ் ஒன்றாக அமைந்துள்ள இந்த துளைகள், தூரத்தில் இருந்து பார்க்கும்போது, புல்லாங்குழலின் துளைகள் போன்று காட்சியளிக்கின்றன.



# பயிர்களுக்கு நீர் பாய்ச்சி உரமிட்டுக் காப்போம்

பயிர்கள் சிறப்பாக வளர்வதற்கும் பயன் தருவதற்கும் ஏற்றவகையில், அவற்றுக்கு நீர் பாய்ச்சி, உரமிட வேண்டியது முக்கியமாகும். நீர் பாய்ச்சுவதற்கு செடிகள் வாடும் வரை இருக்கக்கூடாது. நீர் பாய்ச்சும் போது, பயிர்களின் அடிப்பகுதியில் போதியளவு நீர் விடுவதே சிறந்தது. அப்போதுதான் பயிர்களின் வேர்ப் பகுதிக்கு நீர் கிடைக்கும். இது பயிர்களின் வளர்ச்சிக்கு உதவும். அவ்வாறே, பயிர்கள் நடப்பட்டு ஆரம்பகாலத்திலும் வளர்ச்சிக் காலத்திலும் பலன் தரத்தொடங்கும் காலத்திலும் உரமிடுவது அதிக பலனைத் தரும். பயிர்களுக்கு செயற்கை உரங்களைத் தவிர்த்து, இயற்கை உரங்களை இடுவது நுகர்வோரின் சிறந்த ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.



இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஒக்டோபர் 05 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 05, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org